விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 292 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 21 செவ்வாய்க்கிழமை (07.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில்

# இலங்கைக்கு எதிரான தீர்மானம்
# வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் கொண்டு வரப்பட்ட பிரேரணை வாக்கெடுப்பின்றி நேற்று நிறைவேற்றப்பட்டது. (15ஆம் பக்கம் பார்க்க)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன் விழாக் கொண்டாட்டங்கள்




06ஆம் பக்கம் பார்க்க

காணி உறுதியில் மோசடி

## யாழில் பெண் சட்டத்தரணி கைதாகிப் பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் முறையற்ற விதத்தில் காணி உறுதி எழுதப்பட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட பெண் சட்டத்தரணி ஒருவர் நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட நிதி சார் குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பொம்மை வெளிப்பகுதியில் காணி

15ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியாவில் இராசேந்திரம்குளம் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் சாம்பல்தோட்டம் பகுதியைச் சேர்ந்த கோபால்ராஜ் நிலக்சன் (வயது-18) என்பவரே உயிரிழந்தவராவார்.

கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதிலேயே குறித்த இளைஞன் உயிரிழந்துள்ளார். (ம-7,250)

## கம்பளையில் கோர விபத்து

மூன்று பெண்கள் பலி

(கம்பளை)

கம்பளை - தொலுவ வீதியில் இடம்பெற்ற விபத்தில் மூன்று பெண்கள் உயிரிழந்துள்ளதுடன், மற்றொருவர் காயமடைந்துள்ளதாக

15ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு சட்டத்தரணிகள் இன்று பணிப் புறக்கணிப்பு

யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் உள்ள சட்டத்தரணிகள் யாவரும் இன்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர் என யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது.

05 ஒக்ரோபர் 2025 அன்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடமையாற்றும் சட்டத் த ர ணி

15ஆம் பக்கம் பார்க்க

## காரைநகரில் விபத்து

குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் காற்றாலை அமைக்க மணல் ஆய்வுக்கு வந்த குழு

மக்களால் விரட்டியடிப்பு

(மன்னார்)

மன்னாரில் காற்றாலைத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான மணல் ஆய்வு முன்னெடுக்க குழு ஒன்று வருகை தந்த நிலையில் மக்களின் பாரிய எதிர்ப்புக்கு மத்தியில் குறித்த குழு அங்கிருந்து வெளியேறியது.

15ஆம் பக்கம் பார்க்க



யாழ்.கொழும்புத்துறையில்

## மின்சார சபை ஊழியர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் மின்சார சபை ஊழியர் மீது தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் கணக்குக் கிளையில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி மயூரன் சசிதாவின் தந்தையார்

அமரர் **விநாயகமூர்த்தி சண்முகநாதன்**

தோற்றம் : 25.01.1937 மறைவு : – 05.10.2025

அவர்கள் 05.10.2025 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மாசாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிரிவுத் துயருடன்... பிரதேச செயலாளரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.

(C-4046)

# வேலையாட்கள் தேவை

கச்சாய் வீதி கொடிகாமத்தில் இயங்கும் பண்ணை ஒன்றில் குடும்பமாகத் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய வேலையாட்கள் தேவை.
தங்குமிட வசதி வழங்கப்படும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 076 7114**

(C-4047)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

# வேலையாட்கள் தேவை

## (60 பெண்கள் மட்டும் தேவை)

வீட்டில் இருந்தவாறு வேலை செய்ய முடியும். (NEED : fast running android phone and speed network connection)
வயதெல்லை 20-30 வயதிற்குட்பட்டவராகவும் யாழ் மாவட்டத்தை சேர்ந்தவராகவும் இருக்க வேண்டும்.(மாத வருமானம் 30 000 LKR)

Contact us:
Whatsapp message **075 602 7697**

(5602)

# யாழ்.மாவட்ட அழகக கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

## பொதுக்கூட்ட அறிவித்தலும் அதிர்ஷ்டலாப சீட்டிழுப்புத் திகதி மாற்றமும்

யாழ்.மாவட்ட அழகக கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் இன்று (07.10.2025) செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணிக்கு யாழ்.தந்தை செல்வா கலையரங்கத்தில் (யாழ்.மத்திய கல்லூரி மைதானத்துக்கு முன்பாக) நடைபெறவுள்ளது.

அனைத்து அங்கத்தவர்களும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதோடு யாழ்.மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்கும் முழுமையான விடுமுறையாகும்.

இன்று (07.10.2025) செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டு எதிர்வரும் 26.10.2025 அன்று காலை 10.00 மணியளவில் தந்தை செல்வா கலை அரங்கத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்படும். எனவே அனைத்துக் கிளைச்சங்க, சமாச முக்கிய பிரதிநிதிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நிர்வாகம்,
யாழ்.மாவட்ட அழகக கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

(5603)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
**திருமதி சசிரேகா மோகனச்செல்வன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்



**அமரர் விநாயகமூர்த்தி சண்முகநாதன்**

அவர்களின் மறைவுச் செய்தியறிந்து
ஆழ்ந்த துயரடைகின்றோம்.
அன்னாரின் பிரிவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

(C-4048)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 - 07 - 1970 | 06 - 10 - 2025 |

## திருமதி கேந்திரநாதன் ஜெயந்தி

### (யா/வடமத்திய மகளிர் கல்லூரி – வதிரி, கரவெட்டி ஆசிரியர் (பொருளியல்))

பெரியார்பகுதி அல்வாய் கிழக்கு அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கேந்திரநாதன் ஜெயந்தி நேற்று 06.10.2025 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் - அன்னலட்சுமி தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பரமேஸ்வரி தம்பதியினரின் மருமகளும் கேந்திரநாதன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஜெயராஜ் மற்றும் ஜெயகாந்தன், ஜெயசந்திக்கா, ஜெகன், ஜெயபிரபா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிரோமி, பிரதீபன், யசோதா, மதன்லால் ஆகியோரின் மைத்துனியும் ரிகேஸ், கர்ஷா, அஞ்சலி, அபினி ஆகியோரின் மாமியாரும் அக்சயன், அக்சயா, ஆதவி, இனியன் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2025) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.30 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பெரியார்பகுதி,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

தகவல் :
குடும்பத்தினர்

(C-4050)

# ஓராண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 17 . 02 . 1940 | 17 . 10 . 2024 |

## அமரர் நாகலிங்கம் ஏகாம்பரநாதன்

### (பரம்) நயினாதீவு

(ஓய்வு நிலை உத்தியோகத்தர், பிரதேச செயலகம் – வேலணை)

காலம் கரைந்தோடுகிறது அப்பா எனும்
அந்த மாயச்சொல்லோசை காற்றின் மீதேறி
காதடையும் போதெல்லாம் நெஞ்சம் நெகிழ்கிறது.
எங்கள் அப்பா எங்களின் நம்பிக்கை, துணிவு, அன்பு
தோழமை, மகிழ்வு, புன்னகை, பெருமிதம் எல்லாமுமே
தோள் தொட்டுத் துணையாகி வந்த எங்கள் வாழ்வின் நாயகனை
காலத்திடம் தொலைத்து காத்திருக்கின்றோம்.
கள்ளமற்ற புன்னகையையும் குதூகலிக்கும் பிள்ளை மனதையும்
எல்லாவற்றையும் மன்னிக்கும் இனிய பண்பையும்
இழந்தோம் அப்பா! உங்கள் அன்பெனும் நினைவுகளில்
கரைகிறது எம் மனம். நினைவுகள் வருடும் ஒவ்வொரு பொழுதுகளிலும்
நிறைகின்ற விழிநீரில் நீங்கள் எம்மோடு வாழ்கின்றீர்கள்!

21/21, கலாசாலை வீதி,
2ம் ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு.

குடும்பத்தினர்

(1628)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கல்வி சீர்திருத்தங்களால் ஆசிரியர்களுக்கு பாதிப்பில்லை

## உறுதிபடத் தெரிவித்தார் பிரதமர்



**(கொழும்பு)……………… புதிய கல்வி சீர்திருத்தங்களால் ஆசிரியர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

மாத்தளை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற புதிய கல்வி சீர்திருத்தங்கள் குறித்த பட்டறையில் பங்கேற்ற போது அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

21 ஆம் நூற்றாண்டை எதிர்கொள்ளக்கூடிய முழுமையான அறிவைக் கொண்ட ஒரு பிள்ளையை உருவாக்குவதே புதிய கல்வி சீர்திருத்தச் செயல் முறையின் நோக்கம்.

பாரம்பரிய கல்வி முறைக்கு பதிலாக, மாணவர்களுக்கு அழுத்தமில்லாத கற்றல் சூழலை உருவாக்கி, அவர்கள் விரும்பும் துறைகளைத் தேர்ந்தெடுக்க வழிகாட்டும் வகையில் சீர்திருத்தங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.


அத்துடன், இந்த விடயம் தொடர்பில் அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடிய தன் பின்னரே தீர்மானம் எடுக்கப்படும் எனவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

இதனிடையே, புதிய கல்வி சீர்திருத்தங்கள் குறித்து கல்வி அதிகாரிகளிடம் கூட சரியான புரிதல் இல்லை என கல்வித் தொழிற்துறையினர் சங்கத்தின் தலைவர் உலபனே சுமங்கல தேரர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், புதிய கல்வி சீர்திருத்தங்கள் குறித்து விரிவான கலந்துரையாடல்களின் பின்னர் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டுமென அவர் கூறியுள்ளார். (நி)

# அதிக விலைக்கு அரிசி விற்பனை

## 135 கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை



(கொழும்பு)

அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த 100இற்கும் மேற்பட்ட கடைகள் மீது சட்ட நடவடிக்கை எடுத்து வருவதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த மாதத்தில், நாடு முழுவதும் நடத்தப்பட்ட சோதனைகளில் 135 கடைகளின் வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இதேவேளை, அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்பவர்கள் மற்றும் அதை மறைப்பவர்களுக்கு எதிராக சோதனைகள் தொடரும் என நுகர்வோர் விவகார அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (நி)

# சிறுவர்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள் தொடர்பில் அதிகரிக்கும் முறைப்பாடுகள்

(கொழும்பு)

நாட்டில் கடந்த ஓகஸ்ட் மாதம் இறுதி வரையான காலப் பகுதியில், சிறுவர்கள் தொடர்பாக 6,500இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக, தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதனால், நாட்டில் உள்ள ஒவ்வொரு சிறுவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கு, தேசிய கட்டமைப்பை நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, 2026 ஆம் ஆண்டுக்குள் ஒவ்வொரு மாகாணத்தில் இருந்தும், சிறுவர்களுடன் தொடர்புடைய முறைப்பாடுகளைக் காணொளிகளாக சேகரிப்பதற்கான பிரிவு ஒன்றை நிறுவத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது ராகம மற்றும் கொழும்பு பகுதிகளில் முறைப்பாடுகள் குறித்தான காணொளி ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இதேவேளை, இந்த ஆண்டு சிறுவர்கள் பாதுகாப்பு தொடர்பாக 1,459 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறுவர்கள் துன்புறுத்தல் தொடர்பாக 1,315 சம்பவங்களும், குழந்தைகளின் கட்டாயக் கல்வி உரிமை மறுக்கப்பட்டமை குறித்து 1,083 சம்பவங்களும், பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக 372 சம்பவங்களும், ஆலோசனை மற்றும் உளவியல் சார்ந்த 366 சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

அத்துடன், சிறுவர்களுக்கு எதிரான இணையவியல் வன்முறை தொடர்பாக 92 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகத் தேசிய சிறுவர்கள் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (நி)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகக் குறைந்த பிறப்பு வீதம்

## பதிவாளர் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டு நாட்டின் பிறப்பு எண்ணிக்கையானது 80,945 ஆல் குறைவடைந்துள்ளதாக பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், மிகக்குறைந்த பிறப்புகள் முல்லைத்தீவு பகுதியில் இருந்து பதிவாகியுள்ளன.

அங்கு 50 ஆண் குழந்தைகளும் 50 பெண் குழந்தைகளுமாக 100 பேர் மாத்திரமே பிறந்துள்ளனர்.

எனினும், கடந்த ஆண்டு கொழும்பு மாவட்டத்தில் அதிக பிறப்புக்கள் பதிவாகியுள்ளதாகவும் அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, 1,200 ஆண் குழந்தைகளும் 1,246 பெண் குழந்தைகளும் பிறந்துள்ளனர்.

அதேநேரம், கண்டி மாவட்டத்தில் பிறப்பு எண்ணிக்கை 1,471 ஆக பதிவாகியுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த வருடத்தில் மாத்திரம் பிறப்பு எண்ணிக்கை 779 ஆக பதிவாகியுள்ளது.

2020 ஆம் ஆண்டு நாட்டின் பிறப்பு எண்ணிக்கை 301,706ஆகவும் கடந்த ஆண்டு பிறப்புக்களின் எண்ணிக்கை 220,761 ஆக பதிவாகியுள்ளது.

இந்த தரவுகளின் அடிப்படையில், கடந்த வருடத்தில் மொத்தமாக 10,611 ஆண் குழந்தைகளும் 11,305 பெண் குழந்தைகளும் பிறந்துள்ளன.

இதேவேளை, கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் இறப்புக்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளதாகவும் பதிவாளர் நாயக திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# நீச்சல் குளத்தில் விழுந்த பந்தை எடுக்க முயன்ற மாணவன் உயிரிழப்பு

(மாத்தறை)

மாத்தறையில் நீச்சல் குளத்தில் விழுந்த கிரிக்கெட் பந்தை எடுக்கச் சென்ற பாடசாலை மாணவன் நீச்சல் குளத்தில் மூழ்கி உயிரிழந்தார்.

மாத்தறை திக்வெல்ல விஜித மகா வித்தியாலயத்தில் 12 ஆம் வகுப்பில் கல்வி கற்று வந்த 17 வயதான பாடசாலை மாணவன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த மாணவர் பாடசாலை மைதானத்தில் ஏனைய மாணவர்களுடன் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த போது, அதே பாடசாலையின் நீச்சல் குளத்தில் கிரிக்கெட் பந்து விழுந்த நிலையில், அதை எடுக்க முயன்றபோது இந்த விபத்து ஏற்பட்டது.

சடலம் பதிகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளதுடன், சம்பவம் குறித்து திக் வெல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# கடந்த ஆண்டில் மட்டும் 8 ஜனாதிபதி மாளிகைகளுக்கு 8 கோடி ரூபாய் செலவு

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்தின் கடந்த 2024 ஆம் ஆண்டுக்கான பராமரிப்பு பற்றிய செலவுகள் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கமைய, இலங்கையின் எட்டு ஜனாதிபதி மாளிகைகளைப் பராமரிப்பதற்காகக் கடந்த 2024 ஆம் ஆண்டில் மாத்திரம் 8 கோடியே ஒரு இலட்சத்து 54 ஆயிரத்து 422 ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் உள்ள கணக்காய்வு அறிக்கையில் இந்தத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மாளிகைகள் யாழ்ப்பாணம், அநுராதபுரம், கண்டி, மஹியங்கனை, நுவரெலியா, கதிர்காமம், பெந்தோட்டை, மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளில் அமைந்துள்ளன.

இந்த எட்டு மாளிகைகளிலும் 392 பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் 16 சிவில் ஊழியர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## மகளிர் உலகக் கிண்ணம்

# பாகிஸ்தானை வீழ்த்தி வெற்றியீட்டியது இந்தியா




மகளிர் உலகக் கோப்பை கிரிக் கெட் போட்டி இந்தியா மற்றும் இலங்கையில் நடந்து வருகிறது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் ஆடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 247ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது. ஹர்லின் தியோல் 46 ஓட்டங்களும், ஜெமிமா ரோட்ரிக்ஸ் 32 ஓட்டங்களும், பிரதிகா ராவல் 31 ஓட்டங்களும் எடுத்தனர்.

இறுதி கட்டத்தில் அதிரடியாக ஆடிய விக்கெட் கீப்பர் ரிச்சா கோஷ் 20 பந்தில் 2 சிக்சர், 3 பவுண்டரி உட்பட 35 ஓட்டங்கள் அடித்து அசத்தினார்.

பாகிஸ்தான் சார்பில் டயானா பெய்க் 4 விக்கெட்டும், பாத்திமா சனா, சாதியா இக்பால் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 248 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் களமிறங்கியது. அந்த அணியின் சிட்ரா அமின் தனி ஆளாகப் போராடினார். அரை சதம் கடந்த அவர் 81 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். நடாலியா பர்வேஸ் 33 ஓட்டங்கள் எடுத்தார். மற்ற வீராங்கனைகள் நிலைத்து நிற்கவில்லை.

இறுதியில், பாகிஸ்தான் அணி 43 ஓவரில் 159 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதன் மூலம் இந்திய அணி 88 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.

இந்தியா சார்பில் கிராந்தி கவுட், தீப்தி சர்மா தலா 3 விக்கெட்டும், ஸ்நேரானா 2 விக்கெட்டும் கைப்பற்றினர். (3)

# மைக்கல் துடுப்பாட்ட இறுதிப்போட்டியில் சம்பியனானது கலைமகள் அணி



மாலை சந்தை மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் 5 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் தர்சிகனின் அதிரடியான துடுப்பாட்டத்தால் கலைமகள் அணியினர் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். கடந்த சனிக்கிழமை மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கலைமகள் அணியை எதிர்த்து அல்வாய் யூத் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அல்வாய் யூத் அணி நிர்ணயிக் கப்பட்ட 5 ஓவர்களில் 4 விக்கெட்டு களை இழந்து 60 ஓட்டங்களை பெற்றனர். அவ்வணி சார்பில் அதிக பட்சமாக சாதுர்ஜன் 23 ஓட்டங் களையும், பிரசாந் 17 ஓட்டங்களை யும் பெற்றனர். பந்து வீச்சில் கலை மகள் அணி சார்பில் அமீர் 2 விக்கெட்டுகளையும், தர்சிகன், பிரசாத் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டு களையும் கைப்பற்றினர்.

61 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய கலைமகள் அணி முதலில் விக்கெட்டுகளை பறிகொடுத்து தடுமாறிய போது கலைமகள் அணி வீரர் தர்சிகன் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி 4.4 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 62 ஓட்டங்களை பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். அவ்வணி சார்பில் தர்சிகன் 42 ஓட்டங்களையும், அமீர் 11 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் அல்வாய் யூத் அணி சார்பில் டிலக்சன் 2 விக்கெட்டுக்களையும், பிரசாந்த் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இதில் ஆட்ட நாயகனாக கலைமகள் அணியைச் சேர்ந்த தர்சிகன் தெரிவு செய்யப்பட்டார். (3-90)

## வீழ்த்தியதால் வெறி...!

# 'கிங்' ஐ தூக்கி வீசி எறிந்த ஹிகாரு



அமெரிக்காவில் டெக்சாஸ் மாகாணத்தில் செக்மேட் செஸ் போட்டி நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் மாலை டெக்சாஸின் ஆர்லிங்டனில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இந்தியா- அமெரிக்கா மோதியது.

இதில், அமெரிக்க அணி 5-0 என்ற கணக்கில் இந்திய அணியை வீழ்த்தியது. நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில், அமெரிக்க கிராண்ட்மாஸ்டர் ஹிகாரு நகமுரா, இந்திய கிராண்ட் மாஸ்டரும் உலக சம்பியன் குகேஷ் டோமராஜுவை தோற்கடித்தார்.

இதையடுத்து, ஹிகாரு நாகமுரா, குகேஷின் கையில் இருந்த ராஜாவை (KING) பிடுங்கி அங்கிருந்த கூட்டத்தின் மீது விசிறியடித்தார். பின்னர், ரசிகர்களை பார்த்து கையசைத்து ஆரவாரம் செய்தார்.

அமெரிக்க கிராண்ட்மாஸ்டர் ஹிகாரு நாகமுரா ஹிகாருவின் செயலை கண்டு குகேஷ் அதிர்ச்சி அடைந்ததுடன் பின் இந்திய அணி வீரர்கள் குகேஷை சமாதானப் படுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (3)

உடனடி வேலைவாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்
40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)
சம்பளம் 30,000/- இலிருந்து 50,000/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com
(C-4049)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

Priya Boarding Center (Pvt) Ltd
❖ யாழ்.பல்கலைக்கழக மாணவிகள் தங்கும் பிரத்தியேக பெண்கள் விடுதிக்கு இரவுக் கடமை பாதுகாப்புப் பெண் உத்தியோகத்தர்கள் தேவை.
வயது: 21 – 50 வயதுக்கு உட்பட்டவர்
கடமை நேரம்: 19.30 – 06.00
❖ துப்பரவுப் பணியாளர்கள் தேவை.
வயது: 21 – 50 வயதுக்கு உட்பட்டவர்
கடமை நேரம்: 09.00 – 17.00
தொடர்பு: 077 802 6036
(5604)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அநுர அரசு இதை நிச்சயம் நிறைவேற்றும்

### நம்பிக்கை வெளியிட்டார் பொன்சேகா



(கொழும்பு)

ராஜபக்ஷக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால் மட்டுமே இந்த அரசாங்கம் நாட்டை அபிவிருத்தி செய்தது என ஏற்றுக் கொள்ள முடியும் என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எவ்வளவு தம்பட்டம் அடித்துக் கொண்டாலும் நாட்டை அபிவிருத்தி செய்ததாக ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷக்களுக்கு உரிய பாடங்களை கற்பிக்க தவறினால் தேசிய மக்கள் சக்தி நாட்டை அபிவிருத்தி செய்ததாக ஏற்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷக்களுக்கு உரிய பாடத்தை கற்பிக்கும் நாளிலேயே அநுர தலைமையிலான அரசாங்கம் இந்த நாட்டு மக்களுக்கு உண்மையிலேயே சேவை ஆற்றியுள்ளது என்பதை நாம் ஏற்றுக் கொள்வோம் என அவர் தெரிவித்துள்ளார்.

இதுவே யதார்த்தம் இதுவே, சத்தியம் என சரத் பொன்சேகா சுட்டிக்காட்டியுள்ளார். தமக்கு அதிகாரம் இல்லை என்றாலும் உண்மையை பேசுவதற்கு எப்பொழுதும் அஞ்சியது கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# உலக வதிவிட தினத்தை முன்னிட்டு பயனாளிகளிடம் வீடுகள் கையளிப்பு



(வவுனியா)

உலக வதிவிட தினத்தை முன்னிட்டு வவுனியாவில் வீடுகள் மற்றும் உறுதிப்பத்திரங்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நாடு பூராவும் உலக வதிவிட தினத்தின் 39 ஆவது ஆண்டினை முன்னிட்டு "என்னுடைய இடமும் அழகான வாழ்க்கையும்" எனும் தொனிப்பொருளில் வீடு கையளிக்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வவுனியாவில் உள்ள நான்கு பிரதேசசபை பிரிவுகளிலும் 20 வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளதுடன், 62 பேருக்கு உறுதிப்பத்திரமும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் ந.கமலதாசன், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்ட அதிகாரி தேவிகா விஜயரத்தின மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (3-250)

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் "செமட்ட நிவஹண" மானிய வீட்டு திட்டத்தின் கீழ் மன்னார் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட 30 வீடுகள் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.



உலக குடியிருப்பு தினத்தையொட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குறித்த வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக வசதியற்ற குடும்பங்களுக்கு ஒரு மில்லியன் ரூபாய் நிதியுதவியின் மூலம் வீடுகள் கட்டி வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதற்கு அமைவாக மன்னார் மாவட்டத்தில் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்தும் ஒரு பிரதேச செயலாளர் பிரிவில் 6 பயனாளிகள் வீதம் 30 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

அதற்கமைவாக மன்னார் மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஊடாக ஒரு மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில் பயனாளிகளின் மேலதிக நிதி செலவீட்டில் குறித்த வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

நேற்றைய தினம் திங்கட்கிழமை காலை மன்னார் மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ஏ.எம். இப்ராஹிம் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன், பிரதேச செயலாளர்கள், திட்டமிடல் அதிகாரி,மன்னார் மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பணியாளர்கள் கலந்து கொண்டு வைபவ ரீதியாக திறந்து வைத்தனர். (3-285)

# மருத்துவத்திற்கான நோபல் பரிசு 3 பேருக்கு அறிவிப்பு

(சுவீடன்)

2025 ஆம் ஆண்டு நோபல் பரிசுக்கான அறிவிப்புகள் வெளியானது. இதில், முதலில் மருத்துவத் துறைக்கான நோபல் பரிசு 3 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அமெரிக்காவைச் சேர்ந்த மேரி இ பிரன்கோவ், ஃபிரெட் ராம்ஸ்டெல், ஜப்பானைச் சேர்ந்த ஷிமோன் சகாகுச்சி ஆகிய 3 பேருக்கு மருத்துவத் துறைக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

மனித உடலில் உள்ள புறநோய் எதிர்ப்பு சக்தி தொடர்பான ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புக்காக நோபல் பரிசு 3 பேருக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. (நி)

# மதுபோதையில் சாரத்தியம் 34 சாரதிகள் கைது!

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது மது போதையில் வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 34 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவ வீரர்கள், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்த சுற்றி வளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது,சந்தேகத்தின் பேரில் 760 பேரும், பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 23 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 290 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 172 பேரும், கவனக்குறைவாக வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 21 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3736 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி)


அலுவலக தளபாடங்கள் விற்பனைக்குண்டு

இடம்: குடும்பப் புனர்வாழ்வு நிலையத்தின் - யாழ்ப்பாண காரியாலயம்

முகவரி: தல்லக்கடி வீதி, புகையிர நிலையம், சுன்னாகம், யாழ்ப்பாணம்.

மேற்படி முகவரியில் அமைந்துள்ள எமது காரியாலயத்தில் தளபாடங்கள், மோட்டார் சைக்கிள் மலிவு விற்பனைக்குண்டு.

எதிர்வரும் 07.10.2025-17.10.2025
கிழமை நாட்கள் காலை 8.30 - மாலை 4.30 பார்வையிடலாம்

தொடர்புகளுக்கு
021 226 1122

(C-306)

வாகனங்கள் விற்பனைக்குண்டு

Hero Pleasure மோட்டார் சைக்கிள்
Hero Passion மோட்டார் சைக்கிள்

மேற்குறிப்பிட்ட அனைத்து வாகனங்களும் நல்ல நிலையில் உள்ளன.

நேரடியாக வாகனங்களைப் பார்வையிட்டு விலை மதிப்பீட்டைச் செய்து கொள்ளலாம் (Price Quotation)

ஆர்வமுள்ளவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணுக்குத் தொடர்பு கொள்ளவும்.

011 258 0166

கிழமை நாட்கள் காலை 8.30 - மாலை 4.30 பார்வையிடலாம்.

குடும்ப புனர்வாழ்வு நிலையம்,
இல 87, வேளாங்கண்ணி கோவில் வீதி,
சாவற்கட்டு, மன்னார்.

(C-305)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு 50 ஆண்டுகள் கடந்த நிலையில் நேற்று பொன் விழா கொண்டாட்டங்கள் யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் கோலாகலமாக இடம்பெற்றன.காலை 9 மணிக்கு ஆரம்பமான பொன் விழா நிகழ்வில் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கபில செனிவிரத்ன பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தார்.வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கே.எல்.வசந்தகுமார அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டிருந்தனர்

பல்கலைக்கழகத்தின் ஐம்பது வருடகால கல்விப் பணி வரலாற்றை எடுத்தியம்பும் வகையில் அமைந்த வரலாற்றுப் பொக்கிஷமான "யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொன்அகவை வரலாறு" எனும் நூலும், பல்கலைக்கழகத்தின் பொன்னகவையை நினைவு கூரும் வகையிலான நினைவு முத்திரை வெளியீடும் இந் நிகழ்வில் சிறப்பாக நடைபெற்றது.



கைதடி அரசினர் முதியோர் இல்லத்தில் கடந்த சனிக்கிழமை முதியோர் தினவிழா அத்தியட்சகர் இராஜ மனோகரன் தலை மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இராசம்மா இராசையா ஞாபகார்த்த பேருந்துத் தரிப்பிட திறப்பு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ் சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

# உளநல நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம் நடத்தும் உளநல நாள் நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். வலயக்கல்வி அலுவலக வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.மாலதி முகுந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் உளநல மருத்துவர் வைத்தியர் எஸ். சிவதாசன் கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக பிரதிக்கல்விப் பணிப்பாளர் பா.வாசுதேரவன், யாழ்ப்பாணம் மாகாணக்கல்வித் திணைக்கள பிரதிக்கல்விப் பணிப்பாளர் இ.ஜெயகரன், யாழ்ப்பாணம் கோட்டக்கல்வி அலுவலர் கே.லங்காபிரதீபன், யா/ மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலை அதிபர் இக்னேசியஸ் க்ளனி மற்றும் யாழ். போதனா வைத்திய சாலை உள வள துணையாளர் ந.நவராஜ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (3)

உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

# பலப்பரீட்சை நடத்தவுள்ள

## சென்.அன்ரனிஸ் - வதிரி டைமன் அணிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் அனுசரணையோடு கிளிநொச்சி - பூநகரி - வலைப்பாடு - ஜெகமீட்பார் விளையாட்டுக்கழகத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றன.

அரை இறுதிப் போட்டிகளில், வடமராட்சி வதிரி டைமன் அணியை எதிர்த்து வடமராட்சி - நவஜீவன் அணியும், மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் அணியும் மோதின.

வதிரி டைமன் அணிக்கும், வடமராட்சி நவஜீவன் அணிக்கும் இடையிலான போட்டியில், வதிரி டைமன் அணி போட்டியின் எட்டாவது நிமிடத்தில் தனது முதலாவது கோலைப் போட்டது.

பதிலுக்கு வடமராட்சி நவஜீவன் அணி போட்டியின் 74 ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட்டு போட்டியைச் சமன் செய்தது.

ஆட்ட நிறைவின்போது இரு அணிகளும் 01:01 என்ற கோல் கணக்கில் சமநிலையில் இருந்தமையால், இரண்டு அணிகளுக்கும் தண்டனை உதைகள் வழங்கப்பட்டன.

தண்டனை உதைகள் மூலம் வதிரி டைமன் அணி 08:07 என்ற கணக்கில் ஆட்டத்தைத் தனதாக்கி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

இதேவேளை, பாசையூர் சென்.அன்ரனிஸ் அணிக்கும், மயிலங்காடு ஞானமுருகன் அணிக்கும் இடையில் இடம் பெற்ற அரையிறுதிப் போட்டியில், பாசையூர் சென். அன்ரனிஸ் அணி, ஐந்தாவது நிமிடத்தில் தனது முதலாவது கோலைப் போட்டது.


பதிலுக்கு மயிலங்காடு ஞானமுருகன் அணி ஆட்டத்தின் 24 ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட்டு ஆட்டத்தை சமநிலை செய்தது.

ஆட்ட நேர முடிவின்போது அணிகள் 01:01 கோல்கள் கணக்கில் சமநிலையில் இருந்தமையால், தண்டனை உதைகள் மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய, பாசையூர் சென். அன்ரனிஸ் அணி, 08: 7 என்ற உதைகள் மூலம் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது. இறுதிப் போட்டியில், பாசையூர் சென்.அன்ரனிஸ் அணி மற்றும் வதிரி டைமன் அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-30)

# முதியோர் தினத்தையொட்டி

## முதியோர் இல்லத்தில் சாகச நிகழ்வு



(சாவகச்சேரி)

சர்வதேச முதியோர் தினத்தையொட்டி உலக சாதனையாளர் செ.திருச்செல்வம் என்பவரால் கைதடி முதியோர் இல்லத்தில் சாகச நிகழ்வொன்று நடத்தப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை காலை முதியோர் இல்ல வளாகத்தில் 1500 கிலோகிராம் எடை கொண்ட வாகனத்தை 50மீற்றர் தூரம் தனது காதில் கட்டி இழுத்து முதியோர் இல்ல முதியவர்களை மகிழ்வித்திருந்தார்.

62 வயதான மட்டுவிலைச் சேர்ந்த செ.திருச்செல்வம் 5 உலக சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

அவர் தனது தாடி, தலைமுடி, காது, உடல் ஆகியவற்றில் கனரக வாகனங்களைக் கட்டி இழுத்து சோழன் மற்றும் கலாம் உலக சாதனைப் புத்தகங்களில் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-30-33)



உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் தலைவர் ப.தர்ம குமரன் அவர்களால் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு இல்லம் மெய்ப்பட (பகுதி 02)

## வீடு கட்டுவது வாழ்வதற்கா? இல்லை அது வெறும் கட்டிடமா?

IESL VC

Dream House

வீடு கட்டுவது வாழ்க்கையில் ஒரு முறை எடுக்கும் பிரதானமான முடிவு. ஆனால், ஏன் இந்த ஒருமுறை தீர்மானம் பலரின் வாழ்நாள் சுமையாக மாறி விடுகிறது?

காரணம் மிக எளிது: நாம் வீடு கட்டத் தொடங்கும்போதே, "வாழ்வதற்கான வீடு" எனச் சிந்திக்காமல், "ஏதோ ஒரு வீடு கட்டி முடிக்க வேண்டும்" என்ற எண்ணத்தில்தான் பயணத்தைத் தொடங்குகிறோம்.

1. ஆரம்பத்தின் தவறே... முடிவின் துயரம்!

வீடு கட்டுவதில் பலர் செய்யும் முதல் மற்றும் பெரிய தவறு - திட்டமிடாமல் தொடங்குவது!

"முதலில் கட்டிடத்தை ஆரம்பிக்கலாம், பிறகு பார்த்துக்கொள்ளலாம் " என்று நீங்கள் நினைக்கும் பழக்கம், பின்னர் திருத்தங்கள், செலவு அதிகரிப்பு (Budget Overrun), மற்றும் தாங்க முடியாத மன அழுத்தம் ஆகியவற்றைத்தான் பரிசளிக்கும்.

ஒரு வீட்டைத் தொடங்குவதற்கு முன், தெளிவான திட்டம் (Scope), துல்லியமான பட்ஜெட் (Budget), மற்றும் ஒரு நிபுணர் ஆலோசனை (Professional Advice) - இவை மூன்றும் அவசியம்.

நிபுணர் ஆலோசனைக்கு ஆரம்பத்தில் மொத்தச் செலவில் ஒரு சிறிய பகுதியை மட்டுமே நீங்கள் செலவழிக்க நேரிடலாம். ஆனால், அதை நீங்கள் புறக்கணித்தால், பின்னர் 300% வரை கூடுதல் செலவு செய்ய வேண்டிய துயரச் சூழல் உருவாகலாம். இந்த உண்மையை யாரும் ஆரம்பத்தில் உணர்வதில்லை!

2. வடிவமைப்பு: வாழ்வதற்கான சிந்தனையுடன் இருக்கிறதா?

வீடு அழகாக இருந்தால் மட்டும் போதாது. அது இயற்கையான காற்றோட்டம், சூரிய ஒளிப் பயன்பாடு, ஆற்றல் சேமிப்பு, மற்றும் வசதியான இயக்கம் (Easy Accessibility) ஆகிய முக்கிய அம்சங்களுடன் இருக்க வேண்டும்.

இதைச் சாத்தியப்படுத்துவது வெறும் கட்டிடக்காரர் அல்ல; ஒரு கட்டிடக் கலைஞர் (Architect) மற்றும் பொறியியலாளர் (Engineer) ஆகிய நிபுணர்கள்தான்.

அவர்கள் வெறும் வரைபடம் வரைவதில்லை. உங்கள் வாழ்க்கை முறையையும், நாளைய நிம்மதியையும் வடிவமைக்கிறார்கள்.

"ஒரு வரைபடம் இல்லாத வீடு, திசை மாறிய கப்பல் போலக் கரையில் சேர வழியறியாது!"

3. மலிவு விலை ஒப்பந்தக்காரர்கள்: அதிக விலைப் பிரச்சினைக்கான ரகசியம்!

"குறைந்த விலைக்கு கட்டி முடித்து விடுவோம்" என்ற எண்ணம், இன்றைய வீடு கட்டுபவர்களின் பொதுவான ஆபத்தான சறுக்கல்.

ஒரு ஒப்பந்தக்காரர் விலையைக் குறைவாகச் சொன்னால், அவர் இரண்டு விடயங்களில் ஒன்றை நிச்சயம் செய்வார்.

பொருட்களின் தரத்தைக் குறைப்பார். அல்லது, பின்னர் "அது ஒப்பந்தத்தில் இல்லை" எனக் கூறி, உங்களைச் சிரமப் படுத்தி கூடுதல் பணம் கேட்பார்.

முடிவு என்ன? குறைந்த விலைக்குத் தொடங்கிய வீடு, அதிக விலையுள்ள பிரச்சினைகளைத் தரும்!

சரியான ஒப்பந்தக்காரரைத் தேர்வு செய்வது நிபுணர் ஆலோசனையுடன்தான் செய்யப்பட வேண்டும்.

அவரது அனுபவம், அவர் இதற்கு முன் செய்த பணிகள், மற்றும் நம்பகத்தன்மை ஆகியவை மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும்.

"விலையை மட்டும் பார்க்கும் மனிதர் தேர்ந்தெடுக்கும் ஒப்பந்தக்காரர், பல பிரச்சினைகளைத் தேர்ந்தெடுப்பார்!"

4. மேற்பார்வை இல்லாத வேலை: தோல்விக்கு வழி!

ஒரு தரமான வீட்டுக்கு மூன்று தூண்கள் அவசியம்:

நல்ல வடிவமைப்பு (Good Design)

தகுதியான ஒப்பந்தக்காரர் (Qualified Contractor)

நிபுணர் மேற்பார்வை (Professional Supervision)

ஒரு நிபுணர் பொறியியலாளர் அல்லது ஆலோசகரின் மேற்பார்வை இல்லாமல், கட்டுமானப் பணியைத் தனியாகக் கண்காணிப்பது மிகவும் பெரிய தவறு.

பலர் "நான் பார்த்துக்கொள்கிறேன், பொறியியலாளர் தேவையில்லை" என்று நினைப்பார்கள். ஆனால், ஒரு சிறிய கணக்குப் பிழை, ஒரு தவறான அடித்தளம் - இவை பின்னர் இலட்சக்கணக்கான ரூபாய் நஷ்டமாக மாறும்.

5. ஒப்பந்தம்: உறவு வழியல்ல, நியாய வழி!

வீட்டுக்கான ஒப்பந்தக்காரரைத் தேர்வு செய்ய ஒரு முறைப்படுத்தப்பட்ட நடைமுறையைப் (Bidding Process) பின்பற்றி, விலை, தரம், அனுபவம் ஆகியவற்றை ஒப்பிடுவதுதான் சரியான வழி. ஆனால், நம்மில் பலர் உறவினர் அல்லது நண்பர் கூறியவர் என்ற ஒரே காரணத்துக்காகத் தேர்வு செய்கிறார்கள்.

இதன் விளைவு?

தொடர்ச்சியான வாக்குவாதம், பணம் பற்றிய சண்டை, குறித்த காலத்துக்குள் முடியாத வேலைகள்.

"வீடு உறவினரால் கட்டப்பட்டால், உறவு உடையும்!" - இது கட்டுமான உலகில் அனுபவபூர்வமான உண்மை.

6. இறுதி பரிந்துரை:

அறிவைச் சேர்க்கும் செலவு, தவறுகளைத் தவிர்க்கும் பலன்!

வீடு கட்டுவது என்பது ஒருமுறை நிகழும் வாழ்க்கைத் தீர்மானம், அது வெறும் வியாபாரம் அல்ல.

உங்கள் தேவைகள், குடும்ப அளவு, எதிர்காலத் திட்டம் ஆகியவைதான் வடிவமைப்புக்கான மையமாக இருக்க வேண்டும்.

இதை ஒரு நிபுணர்தான் புரிந்து, உங்கள் கனவை வாழக்கூடிய யதார்த்தமான வீடாக மாற்றுவார்.

ஒரு நிபுணர் ஆலோசனைக்கு நீங்கள் செலவிடும் 3% - 4% தொகை, பின்னர் நீங்கள் செய்யவிருக்கும் 300% கூடுதல் செலவைத் தவிர்க்கும்.

"தொடக்கத்தில் நிபுணரின் அறிவை வாங்குங்கள் பின்னர் தவறுகளைச் சரிசெய்யும் விலையைச் சேமிக்கலாம்!"

உங்கள் வாழ்வின் முக்கிய முடிவு இது.

வீடு கட்டுவது ஒருமுறை - அதை சரியான வழியில் செய்யுங்கள்.

நிபுணர்களை நம்புங்கள், உங்கள் பட்ஜெட்டைத் திட்டமிடுங்கள், தரத்தில் சமரசம் செய்யாதீர்கள், நிம்மதியாக வாழுங்கள்."வீடு கட்டுவது கனவு அல்ல, பொறுப்பு. நிபுணருடன் கட்டுங்கள் - நிம்மதியுடன் வாழுங்கள்."

(தொடரும்)

இலங்கை பொறியியலாளர்கள் சங்கம்
வடக்கின் அத்தியாயம்


# ஆசிரிய சேவை வெள்ளி விழா வாழ்த்துகள்

## எமது கல்லூரியில் ஆசிரிய சேவையில் வெள்ளி விழாக் கண்டுள்ள ஆசிரியர்களை மனமகிழ்வுடனும் நன்றியுடனும் வாழ்த்துகின்றோம்.

## ST.PATRICK'S COLLEGE - JAFFNA


திருமதி. டனிஷியா சுலோசனா சண்முகதாசன் (05.01.1995 – 2020)


திருமதி. ஜெனிஸ் றஜிதா சுரேஷ் அகஸ்ரின் (06.01.1995 – 2020)


திருமதி. மேரி கலிஸ்ரா கிறிஸ்ரி ஜோய் (06.01.1997 – 2022)



திரு. டேவிட் அன்றூ ஜக்சன் (05.01.1998 – 2023)



திருமதி. சுகந்தி லையனால்ட் இரட்ணகுமார் (26.05.1998 – 2023)



திருமதி. திரேசா யூலியற் யோண்ஸ்ற் மற்சுய்க்கர் (23.01.1999– 2024)


திரு. கிறிஸ்ரி அலெக்சிஸ் தயாபரன் (09.02.1999 – 2024)


திருமதி. வற்சலா கருணாகரன் (15.02.1999 – 2024)


திரு. கந்தையா ரவிகரன் (21.10.1999 – 2024)


திரு. யேசுதாசன் இக்னேஷியஸ் (24.01.2000 – 2025)


திரு. இராசையா ரமணன் (16.02.2000 – 2025)

(C-4045)

எண்ணத்தில் அணையாத
தீ மூட்டி
எழுத்ததனில் தாழாத
தெளிவூட்டி
உள்ளத்தை மங்காது
வழி நடத்தி
விழிவழியே காண்கின்ற
சாளரங்கள்
வாழ்வதில் வழி காட்டும்
தெய்வங்கள்
வெள்ளி விழா தடம் பதித்த
நாயகர்கள்
பள்ளியிலே விடியலினைக்
காட்டியதெம்
பத்திரிசியக் கல்லூரியின்
ஒளி தீபங்கள்
வாழிய நீர் பல்லாண்டு
வாழியவே.


ஆசிரியர் சங்கம், புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

மலைச்சரிவுகளில் பனிப்புயல்

## எவரெஸ்ட் சிகரத்தில் ஆயிரம் பேர் சிக்கித் தவிப்பு



(பீஜிங்)

உலகின் மிக உயரமான மலைப் பகுதியான எவரெஸ்ட் மலைச் சிகரத்தின் கிழக்கே திபெத் பிராந்தியம் அமைந்துள்ளது. இங்கு அமைந்துள்ள மலைச் சரிவுகளில் தற்போது கடும் பனிப்புயல் நிலவி வருகிறது.

இந்த மலைச்சரிவுகளில் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த ஏராளமான மலையேற்ற வீரர்கள் அப்பகுதியில் தற்காலிக முகாம்கள் அமைத்து மலையேறும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், உலகின் மிக உயரமான எவரெஸ்ட் மலை சிகரத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள முகாம்களில் தங்கியிருந்த ஆயிரம் பேர் மலையில் இருந்து இறங்க முடியாமல் பனிப்புயலில் சிக்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பனிப்புயலில் சிக்கியுள்ள ஆயிரம் பேரையும் மீட்கும் பணியில் சீன மீட்புப்படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். (நி)



# காசாவை விட்டுக் கொ

# ஹமாஸ் முற்றாக

# ட்ரம்ப் கடும் எச்ச

**(வோஷிங்டன்)**●●●●●●●●●● **காசாவின் கட்டுப்பாட்டை விட்டுக்கொடுக்க மறுத்தால் ஹமாஸ் முழுமையாக அழிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

ட்ரம்பின் அமைதி திட்டத்தை ஏற்று இஸ்ரேல் பணயக் கைதிகளை ஒப்படைப்பதாக கடந்த வெள்ளிக்கிழமை ஹமாஸ் தெரிவித்தது.

இதைத்தொடர்ந்து காசா மீதான தாக்குதலை உடனே நிறுத்துமாறு இஸ்ரேலுக்கு ட்ரம்ப் அறிவுறுத்தினார்.

அதை ஏற்று தாக்குதல்களை நிறுத்துவதாக இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவும் அறிவித்தார்.

ஆனால் நேற்று முன்தினம் காசாவ இஸ்ரேல் நடத்திய தாக்குதலகளி உதவிப்பொருட்களுக்காக காத்திரு இருவர் உட்பட 16 பாலஸ்தீனியர்க கொல்லப்பட்டனர். மேலும் பட்டினியா ஒருவர் உயிரிழந்தார்.

இந்த தாக்குதல் தொடர்பாக பேசி இஸ்ரேல் அரசாங்கத்தின் செய்த

## இந்தியாவில் பற்றி எரிந்த வைத்தியசாலை நோயாளிகள் அறுவர் உயிரிழப்பு



(டில்லி)

இந்தியாவின் ஜெய்ப்பூர் நகரிலுள்ள அரசு சார்ந்த வைத்தியசாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் தீவிர சிகிச்சை பிரிவு நோயாளிகள் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர்.

வைத்தியசாலை அதிகாரிகளின் கூற்றுப்படி, நியூரோ ஐசியுவின் சேமிப்பு பகுதியில் ஏற்பட்ட மின்சார கசிவே இந்த விபத்துக்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தீ வேகமாக பரவியதன் காரணமாக புகை மூட்டம் கட்டடத்தை மூடத்தொடங்கியுள்ளது, அதன்போது அங்கிருந்த நோயாளிகள் மற்றும் அவர்களை காண வந்திருந்த உறவினர்களும் உடனடியாக வெளியேறியுள்ளனர்.

பின்னர், வைத்தியசாலை ஊழியர்கள் மற்றும் தீயணைப்பு வீரர்கள் இணைந்து இரண்டு மணி நேரத்திற்குள் தீயை கட்டுப்படுத்தியுள்ளதுடன், 14 நோயாளிகளையும் பாதுகாப்பாக வெளியேற்றியுள்ளனர்.

எவ்வாறாயினும், பாரியளவிலான மருத்துவ உபகரணங்கள் சேதமடைந்துள்ளதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)



## சிட்னியில் துப்

## —20 பேர்

(கன்பெரா)

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட கண்மூடித்தனமான துப்பாக்கி பிரயோகத்தில் 20 பேர் காயமடைந்துள்ளதுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிகமான பொதுமக்கள் நடமாடிய பகுதியில் இந்தத் துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றிருந்ததுடன் துப்பாக்கிதாரி சுமார் 100 தடவைகளுக்கு மேலாகத் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


இந்நிலையில் துப்பாக்கிச்சூடு நடத்திய 60 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இந்தத் தாக்குதல் பயங்கரவாத தாக்குதல் அல்ல என பொலிஸார் அறிவித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...கொடுக்க மறுத்தால் ...க அழிக்கப்படும்!

## ...சரிக்கை





ாவில்
ளில்
நந்த
ர்கள்
யால்
பசிய
பதித்

தொடர்பாளர், சில குண்டு வீச்சுகள் நிறுத்தப்பட்டாலும், இப் போதைக்கு காசாவில் முழுமையான போர் நிறுத்தம் எதுவும் நடைமுறையில் இல்லை என்று கூறினார்.

இந்நிலையில் காசாவின் கட்டுப்பாட்டை விட்டுக் கொடுக்க மறுத்தால் ஹமாஸ் முழுமையாக அழிக்கப்படும் என ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கிடையே இஸ்ரேலிய பேச்சுவார்த்தைக் குழு ஒன்று, கைதிகள் பரிமாற்றம் தொடர்பாக பாலஸ்தீன குழுவான ஹமாஸுடன் எகிப்தின் ஷர்ம் எல் - ஷேக் நகரில் பேச்சுவார்த்தை நடத்த தயாராக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக லண்டனில் போராட்டம்

## 500 பேர் கைது




(லண்டன்)

பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக பிரிட்டனின் லண்டனில் நடந்த போராட்டத்தில் சுமார் 500 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தடைசெய்யப்பட்ட ஒரு அமைப்புக்கு ஆதரவை தெரிவித்ததற்காக மக்கள் கைது செய்யப்பட்டதாக லண்டன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாலஸ்தீன ஆதரவுப் போராட்டமான "பாலஸ்தீன நடவடிக்கை"யின் ஏற்பாட்டாளர்கள் பிரிட்டனில் தடை செய்யப்பட்ட ஒரு அமைப்பு என்று வெளிநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், ஸ்பெயினின் பார்சிலோனாவிலும் நேற்று முன்தினம் பாலஸ்தீன ஆதரவு போராட்டம் நடைபெற்றது.

சுமார் 70,000 பேர் கூடியிருந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

போராட்டக்காரர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையிலான மோதல்களில் 20 பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்தனர். (நி)




## ...ப்பாக்கிச்சூடு

## ...காயம் —

துள்ளனர். சந்தேக நபரிடமிருந்து இரண்டு ரைஃபிள் ரக துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் இவ்வாறான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் நடப்பது குறைவானது என பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

துப்பாக்கிச்சூடு நடத்திய தாகக் கூறப்படும் சந்தேக நபர் எதற்காக இதனை மேற்கொண்டார் என்பது தொடர்பாக இதுவரை எந்த தகவலும் வெளியிடப்படவில்லை என்றும் கடந்த 1996ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற தனிநபர் தாக்குதலின் போது 35 பேர் படுகொலை செய்யப்பட்ட நிலையில் தானியங்கித் துப்பாக்கிகளை பயன்படுத்துவதற்கு அவுஸ்திரேலியாவில் தடைவிதிக்கப்பட்டுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (நி)



## திடீரென பதவி விலகிய பிரதமர்

## பிரான்ஸ் அரசியலில் பெரும் குழப்பம்!

(பாரிஸ்)

பிரான்ஸ் பிரதமர் செபாஸ்டியன் லெகோர்னு தனது பதவியை விட்டு விலகியுள்ளார்.

2025 செப்ரெம்பர் 9ஆம் திகதியன்று பிரான்ஸின் 47வது பிரதமராக இவர் நியமிக்கப்பட்டு 27 நாட்களே ஆகியுள்ள நிலையில் இந்தத் தீர்மானத்தை அறிவித்துள்ளார்.

அவரது அமைச்சரவையை அறிவித்த சில மணி நேரங்களில் இந்த விலகல் தீர்மானம் அறிவிக்கப்பட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பல்வேறு கட்சிகளும் அவரின் அமைச்சரவையை எதிர்த்து நம்பிக்கையில்லா வாக்கெடுப்பு கோரியுள்ளதன் பின்னணியில் இது இடம்பெற்றுள்ளது.

அவரது பதவிவிலகல் பிரான்ஸ் அரசியலில் மேலும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், அந்நாட்டு ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் குறித்த பதவி விலகலை ஏற்றுக்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி மக்ரோன் 2017இல் பதவியேற்ற பிறகு எட்டாவது பிரதமரை தேர்ந்தெடுப்பதற்காக காத்திருப்பதாக கூறப்படுகிறது.


எவ்வாறாயினும், புதிய பிரதமர் நியமனம் தொடர்பான விவரங்கள் இன்னும் வெளியாகவில்லை. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒக்டோபர் மாத இராசி பலன்கள்

## பணவரத்து நன்றாக இருக்கும்!



**கிரகநிலை** - தைரிய வீரிய ஸ்தானத்தில் சனி, ராகு - களத்திர ஸ்தானத்தில் குரு - பாக்கிய ஸ்தானத்தில் சுக்கிரன், கேது - தொழில் ஸ்தானத்தில் சூரியன் - லாப ஸ்தானத்தில் செவ்வாய், புதன் எனக் கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** இந்த மாதம் எதிலும் எச்சரிக்கையாக செயற்படுவது நல்லது. வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. மற்றவர்கள் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. பணவரத்து நன்றாக இருக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள்.


தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் போட்டிகளை சந்திக்க வேண்டி இருக்கும். ஊழியர்களுடன் சுமூகமாகச் செல்வது நல்லது. வியாபாரம் எதிர்பார்த்த அளவு வேகமாக நடக்காவிட்டாலும் இலாபம் குறையாமல் இருக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடினமான பணிகளை செய்ய வேண்டி இருக்கும். வேலையை விட்டுவிட்டு வேறு வேலைக்கு செல்லலாமா என்றுகூட தோன்றலாம். மனம் தளராமல் இருப்பது நல்லது. வாகனம், வீடு ஆகியவற்றால் செலவு ஏற்படும். குடும்பத்தில் அமைதி குறையலாம்.

குடும்பத்தில் இருப்பவர்கள் எதையும் வெளிக்காட்டாமல் உங்களுடன் இன்முகம் கொடுத்து பேசுவார்கள். கணவன், மனைவிக்கு இடையே இருந்த வருத்தங்கள் நீங்கும். பெண்களுக்கு அடுத்தவர்கள் பொறுப்புகளை ஏற்காமல் தவிர்ப்பது நல்லது.

விருந்து கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வீர்கள். கலைத்துறையினருக்கு வெளிநாட்டு வாய்ப்புகள் கைகூடி வரும்.

அதிகமான ஒப்பந்தங்களில் கையெழுத்திட வேண்டிவரும். அரசியல்வாதிகள் எதிர்பார்த்த பதவிகளை அடைவீர்கள். மேலிடத்தின் மூலம் உங்கள் காரியங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்படும். மாணவர்களுக்கு மிகவும் கவனமாக பாடங்களை படிப்பது அவசியம். வீண் விவகாரங்களை விட்டு விலகுவது நல்லது.




**மூலம்:** இந்த மாதம் சிலருக்கு வெளிநாடு வாய்ப்புகள் வரலாம். அதிலும் கலைத்துறையில் டெக்னிக்கல் சம்பந்தப்பட்ட துறைகளில் இருப்பவர்களுக்கு வாய்ப்புகள் குவியும்.

மாணவர்களுக்கு புதியதாக கல்வி பயில மனம் ஆனந்தப்படும். நல்ல நட்பு வட்டாரம் கிடைக்கும்.

**பூராடம்:** இந்த மாதம் பண விடயங்களில் தேர்ந்தெடுத்து முதலீடு செய்யவும். தூங்கப் போகும் முன் குலதெய்வத்தை வணங்கி விட்டு படுக்கச் செல்லவும்.

தேவையற்ற வீண் குழப்பங்கள், கற்பனைகள் வேண்டாம். எதை பேசினாலும் அவமானம் என்று இருந்த நிலை மாறும்.

**உத்திராடம் 1ஆம் பாதம்:** இந்த மாதம் வாழ்க்கைத் துணையுடன் உறவு சிறக்கும். நண்பர்கள் மூலம் அனுகூலம் கிடைக்கும். எதிரிகளை வீழ்த்த வியூகம் அமைப்பீர்கள். நீதிமன்ற வழக்குகளில் உங்கள் பக்கம் வெற்றி கிடைக்கும். தந்தையாருடன் உறவு பிரகாசிக்கும். பரம்பரைச் சொத்துக்கள் உங்களை வந்து அடையும் நேரம் இது.

**பரிகாரம்:** சிவன் கோவிலை தரிசனம் செய்வது மன அமைதியை தரும். எதிலும் முன்னேற்றம் உண்டாகும்.

**சந்திராஷ்டம தினங்கள்:**
15, 16

**அதிஷ்ட தினங்கள்:**
24, 25, 26

## எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்!



**கிரகநிலை** - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சனி, ராகு - ரண ருண ரோக ஸ்தானத்தில் குரு - அஷ்டம ஸ்தானத்தில் சுக்கிரன், கேது - பாக்கிய ஸ்தானத்தில் சூரியன் - தொழில் கர்ம ஜீவன ஸ்தானத்தில் செவ்வாய், புதன் என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** இந்த மாதம் நீங்கள் எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். உங்களது பேச்சை மற்றவர்கள் சரியாக புரிந்து கொள்வார்கள். எந்த ஒரு காரியமும் இழுபறியாக இருந்து முடிவில் சாதகமான பலன் தரும். வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் நீங்கி முன்னேற்றம் உண்டாகும். இலாபம் அதிகரிக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். வியாபாரத்தில் இருந்த இடையூறுகள் நீங்கும். வியாபார வளர்ச்சி பற்றிய சிந்தனை எழும்.

அரசாங்கத்தில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு சம்பள உயர்வு உண்டாகும். வேலைப்பளு குறையும். பயனற்ற பயணங்கள் உண்டாகலாம். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். உறவினர்கள் மத்தியில் மதிப்புக்கூடும். எண்ணியபடி செயல்களை செய்து காரிய வெற்றி காண்பீர்கள். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.

ஆன்மிகப் பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். திருமண முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். பெண்களுக்கு மனதில் துணிச்சல் அதிகரிக்கும். திட்டமிட்டபடி செயலாற்றி காரிய அனுகூலம் பெறுவீர்கள். கலைத்துறையினருக்கு தொழில் தொடர்பான நெருக்கடிகளை சந்திக்க வேண்டி வரும்.

புது ஒப்பந்தங்கள் தொடர்பான காரியங்கள் சாதகமாக முடியும். அரசியல்வாதிகள் அடுத்தவர்களிடம் வாக்குவாதத்தை தவிர்ப்பது நன்மை தரும். தொலைதூரத் தகவல்கள் நல்லவையாக இருக்கும். மாணவர்களுக்கு பாடங்களை படிப்பது வேகம் பெறும். கல்வியில் வெற்றி பெறுவீர்கள்.




**உத்திராடம் 2, 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் முன்னோர்கள் வழிபாடு மிகவும் முக்கியம். நம்பிக்கையுடன் செய்யும் இந்த வழிபாட்டால் நேர்மறையான செயல்கள் அனைத்திலும் வெற்றிகள் கிட்டும். பதற்றத்தை தவிர்த்து நிதானத்தை கடைப்பிடியுங்கள்.

சிற்சில விரயங்கள் ஏற்பட்டாலும் அவை யாவுமே சுபச் செலவுகள் தான் என்பதை உணருங்கள்.

**திருவோணம்:** இந்த மாதம் வியாபாரிகளுக்கு நெடுநாட்களாக இருந்து வந்த கடன்கள் தீரும். கூட்டு வியாபாரத்தில் கணிசமான இலாபம் கிடைக்கும். வெளிநாடுக்கு ஏற்றுமதி செய்வோருக்கு புதிய ஓடர்கள் வந்து சேரும். புதிய இட ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். தொழிற்சாலைகள் வைத்திருப்போருக்கு நல்ல இலாபம் கிடைக்கும்.

**அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் ஊதியம் உயரும். மேலதிகாரிகள் உங்களை நம்பிப் புதிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உடலில் இருந்த சோர்வும், மனதில் இருந்த குழப்பமும் மறையும். இதனால் உங்கள் தோற்றத்தில் பொலிவு உண்டாகும். சக ஊழியர்கள் உங்களிடம் பகை மறந்து நட்பு பாராட்டுவார்கள்.

**பரிகாரம்:** ஆஞ்சநேயரை வணங்கி வர காரிய தடை நீங்கும். குடும்பப் பிரச்சினை தீரும்.

**சந்திராஷ்டம தினங்கள்:**
17, 18

**அதிஷ்ட தினங்கள்:**
01, 27, 28

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமை கோரப்படாத வாகனங்கள் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் சான்றுப் பொருட்களாக பாரப்படுத்தப் பட்டு இன்றுவரை உரிமை கோரப்படாத கீழுள்ள பட்டிய லில் இலக்கங்கள் குறிப்பிடப் பட்டுள்ள வாகனங்கள், மோட் டார் சைக்கிள்கள் என்பவற்றை அலுவலக நாட்களில் சாவகச் சேரி நீதிவான் நீதிமன்றப் பதிவாளரைத் தொடர்பு கொண்டு, வாகனங்கள் தொட ர்பான உரிமையை உரிய ஆவ ணங்கள் மூலம் உறுதிப்படு த்திப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் தவறும் பட்சத்தில் குறித்த சான்றுப்பொருட்கள் குற்றவி யல் நடவடிக்கை சட்டக்கோவை யின் 432 ஆம் பிரிவின் பிர காரம் பகிரங்க ஏலத்தில் விற் பனை செய்வதற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் குறித்த நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

மோட்டார் சைக்கிள்கள் WR 8705, VE 4998, 148-2381, WH 8569, XI 4000, HG 0912, BIV 9836, JR 2518, XU 4425, TA 7996, X1 8307, HS 9931, VN 1681, BDC 7513, HV 8818, BCI 8198, JZ3032, MB 1494, HE 4029, GO 0325, JN 0788, XI 3590, UT 5936, BGE 1103, BDI 5198, MN 4867, BED 3731, BAO 7574, 500-7930, GQ 2306, 500-4821, JJ 0776, BDU 6489, HK 5916, WE 7163, MG 4431, VV 0452, JA-7762, BHP 0728, JC 7211, BEF 5022, HN 9061, ML 0316, JM 6954, 158-0647, XY 4420, BHI 7020, EP BEA 2109, MD 8186, WW 8067, WC-9927, BFR 2018, BIM 9860, VR 5461, BEH 4278, TY 3821, XE 0685, UG 2017, XD 7444, BGJ 5517, BHX 4640, HO 8242, JS 6762, JD 0767, MQ 7903, MD 4956, XN 1311, 500-4053, JP 1373, JF 8085, VX 1878, BIB 6164, BIE 2447, TQ 3180, BIL 7207, TS 7964, VQ 5258, WY 1694, UD 3945, BEZ 6993, JM 6040, GQ 2494, BBC 7456, BIS 6497, JY 6611, WW 8006, BIC 8127, GY 7058, BGQ 5923, BAJ 2790, BAA 9984, VY 2918, MX 3414, MD 3148, VR 9905, BHX 4913, BBC 8663, BF 0242, BAT 5601, WF 5708, XJ 1803, UX 9119, WL 9853, 150-6653, WY 1690, JB 5087, BDR 4100, BAH 4280, UK 5666, GQ 1920, BBS 1696, VC 4488, MC 8881, BEL 7504, MP 1004, XP 9676, 500-0313, TV 7686, XQ 7518, BES 6931, BHS 7325, BBJ 8314, VP 7543, BDZ 5589, BHB 1196, 500-9941, 500-0524, HD-3812, 97 Sri 4085, BAK 4393, JM 9069, JT5694, HA 6749, VY 0159, 121-9711, VK 4150, TQ 8566, TV 7837, BIV 5769, VE 6048, 500-3856, JX 9573, WL 7519, WF 7351, 144-6727, JL 8429, 90-9755, GO 3132, WE 5996, WP 1685, JH 3477, TV 8024, GO 4352, BAZ 1521, WJ 4784, HH 0804, MH 1686, HP 1184, BCM 0371, JD 4388, BCH 7682, TL 3902, VT 8930, TT 2252, WH 4297, WL 7495, MB 1517, 133-5655, GL 8770, MA 2853, GS 4061, JN 5542, JT 3542, HG 0540, 82 Sri 5303, 500-2359, TH 0758, 102 Sri 7703, JG 3913, XN 6742, TH 4892, JZ 5429, 158-4181, BBW 5183, WB 1776, WY 4556, GC 5641, HP 7694, வாகனங்கள் DAD 0307, 202-6008, RC 0785, 270-0064, 49-7994, YC 6523, AAC 3266, LN 1814, DAB 8125, 206-5159. (3)



தென்மராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் வாணி விழா நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் ஓய்வுநிலை விரிவுரையாளர் கமலநாதன் கலந்து சிறப்பித்திருந்தார்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 160 | 350 | 250 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 200 | 350 |
| தக்காளி | 200 | 200 | 250 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 300 | 200 |
| கோவா | 180 | 200 | 200 | 200 |
| கரட் | 150 | 250 | 300 | 300 |
| பூசணி | 60 | 60 | 100 | 60 |
| புடோல் | 120 | 200 | 150 | 250 |
| வாழைக்காய் | 120 | 100 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 170 | 150 | 160 |
| பாகற்காய் | 500 | 500 | 400 | 500 |
| வெண்டக்காய் | 150 | 250 | 100 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 320 | 250 | 350 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 | 200 |
| லீக்ஸ் | 200 | 230 | 250 | 300 |
| பீற்றூட் | 150 | 110 | 150 | 160 |
| கறிமிளகாய் | 300 | 400 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 300 | 200 |
| போஞ்சி | 450 | 500 | 600 | 500 |
| கத்தரிதம்புள்ள | 180 | 120 | 300 | 200 |
| கீரை - 1 பிடி | 140 | 70-130 | 150 | 100 |
| தேசிக்காய் | 1500 | 1200 | 1000 | 2500 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 160-220 |
| இராசவள்ளி | 800 | 900 | 1000 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 400 | 400 |
| முள்ளங்கி | 150 | 120 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 60 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 250 |

# இராசிபலன்

07.10.2025
புரட்டாதி 21, செவ்வாய்க்கிழமை
பூரணை முற்பகல் 9.55 மணிவரை

ரேவதி பின்னிரவு 3.46 மணிவரை
சுப நேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை

சித்தாமிர்தம்,
சந்திராஷ்டமம்: உத்தரம்

**வளவன்**

**மேஷம்**
தொழில் ரீதியான பய ணங்கள் இடம்பெற லாம், குடும்பத் தேவை களைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்**
புகழ்மிக்கவர்களின் சந் திப்பு இடம்பெறலாம், தடைப்பட்ட காரியங் களில் முன்னேற்றம் காண்பீர்கள், உடல் நலன் சீராகும், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

**துலாம்**
பொது வாழ்வில் புகழ் கூடும், விருந்துகளில் கலந்து கொள்ள அழை ப்புக்கள் வந்து சேர லாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**மகரம்**
விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், நட்பு வட் டம் விரிவடையும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண வேண்டிய நாள், வழிபாடு சிறப்பினைத் தரும்.

**ரிஷபம்**
பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடை பெறும் வாய்ப்புண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**சிம்மம்**
சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, விர யங்கள் மேலோங்கும் நாள், நடப்ப தெல்லாம் நன்மைக்கென நினைக்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்**
தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சி கள் கைகூடும், கல்யான க்கனவுகள் நனவாக லாம், பிள்ளைகள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்**
எதிர்பார்ப்புக்கள் எளி தில் ஈடேறும் நாள், சுபகாரியப் பேச்சுக்களின் முன்னேற்றம் காணும் நாள், விரதங்களில் நம்பிக்கை கூடும், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்**
அரசு வழியில் அனுகூ லமுண்டு, நீண்ட நாளைய விருப்பங்கள் நிறை வேறும் வாய்ப்புண்டு, உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், போசன நன்மையுண்டு.

**கன்னி**
விரும்பிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப் புண்டு, தன்னம்பிக்கை யோடு செயற்படுவீர் கள், பொறுமையால் பெருமைகள் வந்து சேரலாம், பயணத்தால் பிரபலமான வர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**தனுசு**
தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும்.

**மீனம்**
எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**எந்தத் தவறுமே செய்யாதவர் பெரிதாய் எதுவும் செய்திருக்க முடியாது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 879





அவ்விருவரும் அதி வேகமாக சந்து பொந்துகளில் புகுந்து சென்றார்கள். அடங்காங்கு விழுந்து கிடந்த மரங்களை பொருட்படுத்தாமல் தாண்டிக் குதித்துச் சென்றார்கள். மழைத் தண்ணீர் தேங்கியதால் ஏற்பட்டிருந்த சேற்றுக் குட்டைகளையும் கவனியாமல் சென்றார்கள். இன்னமும் இலேசாகக் காற்று அடித்துக் கொண்டிருந்த படியால் மரக் கிளைகள் அசைந்தாடிக் கொண்டிருந்தன. கிளைகளிலிருந்து அவ்வப்போது தண்ணீர்த் துளிகள் சலசலவென்று விழுந்தன. தங்களை யாரும் பின் தொடர்வார்கள் என்ற எண்ணமே அவர்களுக்கு சற்றும் இல்லை. ஆகையால் அவர்கள் திரும்பிப் பாராமலே விரைந்து சென்றார்கள். திரும்பிப் பார்த்திருந்தாலும் மந்தாகினி தேவியை அவர்கள் பார்த்திருக்க முடியாது.

கடைசியில், அவர்களுடைய துரிதப் பிரயாணம் பெரிய பழுவேட்டரையருடைய அரண்மனைத் தோட்டத்தின் பின் மதில் ஓரத்தில் வந்து நின்றது. புயலினால் வேருடன் பறிக்கப்பட்ட மரம் ஒன்று அந்த மதில் மேலே விழுந்து முறிந்து கிடந்தது. ரவிதாஸனும் சோமன் சாம்பவனும் அந்த மரத்தின் மீது எளிதில் ஏறி மதிலைக் கடந்து அப்பால் தோட்டத்தில் குதித்தார்கள். அவர்கள் குதிப்பதைப் பார்த்த மந்தாகினி தேவியும் சிறிது நேரத்துக்கெல்லாம் அதே மரத்தின் மீது ஏறி அப்பாலிருந்த தோட்டத்தில் இறங்கினாள்.

ரவிதாஸன், சோமன் சாம்பவனைச் சற்று தூரத்திலேயே நிறுத்தி விட்டுப் பெரிய பழுவேட்டரையரின் அரண்மனையை அணுகினான். பெரிய பழுவேட்டரையரும் பழுவூர் இளைய ராணியும் இல்லாதபடியால் அரண்மனை சூன்யமாகக் காணப்பட்டது. எனினும் பெண்களின் பேச்சுக் குரல் மட்டும் கேட்டது. ஒருமுறை இரண்டு தாதிப் பெண்கள் அந்த மாளிகையின் பின் முகப்புக்கு வந்தார்கள். தோட்டத்து மரங்கள் பல முறிந்து விழுந்து கிடந்ததைப் பார்த்தார்கள். ஆகா! அனுமார் அழித்த அசோக வனம் மாதிரியல்லவா இருக்கி றது?" என்றாள் ஒருத்தி.

"நம்முடைய சீதா தேவி இங்கே இச்சமயம் இருந்திருந்தால், ரொம்ப மனவேதனைப் பட்டிருப்பாள்!" என்றாள் இன்னொருத்தி.


சற்று நேரம் இவ்விதம் பேசிக் கொண்டிருந்து விட்டு அவர்கள் திரும்ப உள்ளே செல்லும் சமயத்தில் ரவிதாஸன் வாயைக் குவித்துக் கொண்டு ஆந்தைக் குரல் போன்ற ஒலி உண்டாக்கினான். தாதிப் பெண்கள் இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். ரவிதாஸன் நன்றாக மறைந்து கொண்டிருந்தான். தாதிகளில் ஒருத்தி பாரடி! பட்டப் பகலில் கோட்டான் கத்துகிறது! நேற்று அடித்த புயலில் ஆந்தைக்கும் புத்தி சிதறிவிட்டது! என்றாள். இன்னொருத்தி ஒன்றும் சொல்லவில்லை.

சற்று நேரத்துக்கெல்லாம் மறுமொழி சொல்லாமல் சென்றவள் திரும்பி வந்தாள். பழுவூர் அரண்மனைக்கும் பொக்கிஷ நிலவறைக்கும் நடுவில் இருந்த வசந்த மண்டபத்துக்கு வந்து சேர்ந்தாள். இந்த மண்டபத்திலேதான் வந்தியத்தேவன் பழுவூர் ராணியைச் சந்தித்தான் என்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அந்தத் தோழி பெண் தோட்டத்தை உற்றுப் பார்த்தாள். மறுபடியும் ஆந்தையின் குரல் கேட்டது. (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## சிவப்பு மலை!



பல வருடங்களுக்கு முன்பு சிங்கப்பூரைச் சுற்றியுள்ள கடற்பகுதியில் பயங்கரமான வாள் மீன்கள் நிரம்பியிருந்தன.

இவற்றின் மூக்குப் பகுதி நீளமாக வாள் போல இருக்கும். மீன் பிடிக்க கடலுக்குள் செல்லும் மீனவர்களையும் படகுகளையும் வாள் மூக்கால் குத்தி, கடலில் இருந்து விரட்டும். கட கரைகளில் அமரும் மக்களையும் சும்மா விடாது. அந்த நேரத்தில் சிங்கப்பூரின் அரசராக இருந்தவர் ராஜா இஸ்கந்தர்.

தனது படைவீரர்களிடம் வாள் மீன்களைக் கொல்லும்படி உத்தரவிட்டார்.

பெரிதாக வந்த ஓர் அலையில் கடலுக்குள் அடித்துச் செல்லப் பட்ட வீரர்கள், ஈட்டியால் வாள் மீன்களைக் கொல்ல முயன்றனர்.

ஆனால், ஜெயித்தது என்னவோ வாள் மீன்கள்தான்! பல வீரர்களைத் தங்கள் வாள் முக்கால் காயப்படுத்தி துரத்தி அடித்தன. வீரர்களின் ரத்தத்தால் கடல் செந்நிறமாக மாறியது.

போர்வீரர்களில் பலர் இறந்ததால் பயந்துபோனார் அரசர். சோகமாக கடற்கரை மணலில் நடந்துகொண்டு இருந்தார். "இந்தப் பயங்கரமான வாள் மீன்களை எப்படிக் கொல்வேன்?" என்று கத்தினார்.

வழி இருக்கிறது என்றது ஒரு குரல். திரும்பிப் பார்த்தார் அரசர். அருகில் இருந்த பாறையில் ஒரு சிறுவன் அமர்ந்து இருந்தான். அவனே தொடர்ந்து, நீரில் வாழைமரங்களால் ஒரு சுவர் எழுப்புங்கள். அலையில் வாள் மீன்கள் வரும்போது அவற்றின் வாள் மூக்கு கூர்மையாக இருப்பதால் வாழை மரத்தில் குத்தி மீன்கள் சிக்கிவிடும்!" என்றான்.

அதன்படியே நாடு முழுவதும் இருந்து வாழை மரங்களை எடுத்து வந்து கடலில் சுவர் எழுப்பினார்கள்.

அடுத்து வந்த பெரிய அலையில் வாள் மீன்கள் வாழை மரத்தில் சிக்கிக் கொண்டன, அவற்றை அரசரின் வீரர்கள் கொன்று குவித்தனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் நம் சுயமரியாதையில் நிலைத்திருந்தால், அது பிறரும் தன் சுயமரியாதையை மீட்டெடுக்க உதவும். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## 'வழக்கறிஞர்' எனும் தகைமைக்கு பங்கத்தை ஏற்படுத்தாதிருமினே!

நாம் எவ்வளவுதான் கற்றிருந்தாலும் அதன் பயன் இறைவனை வணங்குவது என வள்ளுவப் பெருமான் கூறிவைத்தார்.

இறைவனை வணங்குவது என வள்ளுவன் கூறுவது இறைவனை நெஞ்சிருத்துவதாகும்.

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

இந்தக் குறளின் பொருள் அற்புதமானது. அதாவது நீ கற்றதனுடைய பயன் இறைவனை நினைப்பது. அதை நீ செய்யாவிட்டால், அதனால் எந்தப் பயனும் இல்லை.

இங்குதான் ஓர் உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது கற்றவர்களாயின் அவர்கள் இறைவனின் திருவடியை மறவாதிருக்க வேண்டும்.

அவ்வாறு மறந்தால், அவர்கள் எந்த அநீதி யையும் அக்கிரமத்தையும் செய்யத் தயங்க மாட்டார்கள்.

ஆக, கற்றவர்கள் இறைவனின் திருவடிகளைத் தொழ மறந்தால் அவர்கள் அநீதியின் பாற்பட்டுச் செயலாற்றுவதற்கு நிறைந்த சந்தர்ப்பம் உண்டு.

அவ்வாறு அவர்கள் (கற்றவர்கள்) அநீதி சார்ந்து செயலாற்றுவார்களாயின், அவர்கள் கற்றதனாலாய பயன் என்ன? என்பது வள்ளுவப் பெருமானின் கேள்வியாக உள்ளது.

ஆகவே கற்றறிந்தவர்கள் கடவுளுக்குப் பயந்தவர்களாக - கடவுள் ஒருவன் நம் செயல்கள் அனைத்தையும் பார்க்கிறான் என்ற நம்பிக்கையில் உறுதி கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

அவ்வாறு இருக்கும்போது, அவர்கள் ஆற்றும் கருமங்கள் அனைத்தும் தர்மமாக - நீதியாக - தீங்கில்லாததாக அமையும்.

அந்த வகையில் தற்போது நம் சட்டத்தரணிகள் சிலர் குறித்து வெளிவருகின்ற தகவல்களை அறியும்போது மிகவும் வேதனையாக உள்ளது.

ஆம், ஒருவருக்கு உரித்தான சொத்தை களவுத் தனமாக இன்னொருவருக்கு உரிமை மாற்றுவதென்பது எத்துணை கொடுமை.

சட்டம் படித்து சத்தியப் பிரமாணம் எடுத்து வழக்கறிஞர் என்ற உன்னதமான சொல்லுக் குரியவராக இருக்கின்ற ஒருவர்; கள்ள வேலைக்குத் துணை போவாராயின் - அதற்குக் கையொப்பமிடுவாராயின் அவர் நிச்சயம் கடவுள் பற்றிய சிந்தனை இல்லாதவர் என்று கூறுகின்றார் தெய்வப் புலவர் வள்ளுவர்.

அறிஞர் அண்ணா கூறியதுபோல; இருள் சூழ்ந்த இடத்தில் சட்டத்தரணிகள் ஒளி விளக்காக இருக்க வேண்டும். அவ்வாறு இருக்குமாறே இறைவன் அவர்களுக்கு அந்தத் தகை மையைக் கொடுத்தான்.

ஆனால் எங்கள் வட மாகாணத்தில் காணி சார்ந்து நடந்த அத்தனை மோசடிகளுக்கும் பின்னால் யாரோ ஒரு சட்டத்தரணி இருந்துள்ளார் எனும்போது அது சட்டத்தரணிகள் என்ற உயரிய பதவி நிலைக்குப் பெரும் பங்கமாய் அமைகிறது.

எது எவ்வாறாயினும் சட்டத்தரணிகளும் சட்டத்தின் முன் சமம் என்ற வகையில், உயர்ந்த - உன்னதமான நீதிபரிபாலனம் தனது கடமையைச் செய்யும். செய்ய வேண்டும்.

## முல்லைத்தீவு வைத்தியசாலையின் அவல நிலையால் பறிபோனது தாயின் உயிர்; பரிதவிக்கும் 2 மாதக் குழந்தை

### உறவினர் பகிரங்கக் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் அசமந்தப் போக்கு துறை சார் வைத்தியர்கள் பற்றாக்குறை, மொழிப் பிரச்சினை காரணமாக தனது மருமகளை இழந்ததாக அண்மையில் உயிரிழந்த வற்றாப்பளையைச் சேர்ந்த இளம் தாயாரின் உறவினர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மக்களுக்கு உண்மையைத் தெளிவுபடுத்தும் நோக்கில் நேற்று (06) முல்லைத்தீவு ஊடக அமையத்தில் உயிரிழந்த பெண்ணின் உறவினர் மேற்கொண்ட ஊடக சந்திப்பிலேயே குறித்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் எனது மருமகள் அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தையைப் பிரசவித்திருந்தார்.

அதன் பின்னர் ஆரோக்கியமாகவே இருந்தார். ஆனால் கடந்த 26ம் திகதி நாரி உழைவு ஏற்பட்டதால் தனியார் மருத்துவமனைக்கு சென்றோம். பரிசோதனையில் கிட்னியிலும் இரத்தத்திலும் கிருமித் தாக்கம் இருப்பதாக வைத்தியர் குறிப்பிட்டு உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்லுமாறு 28ம் திகதி எழுதித் தந்திருந்தார். அதன்படி 28ம் திகதி மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதித்தோம்.

தனியார் வைத்தியர் வழங்கிய அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தும் மாஞ்சோலை வைத்தியசாலையில் சாதாரண நோயாளர் வாட்டிலேயே வைத்திருந்தார்கள்.

29ம் திகதி பிற்பகல் வரை சேலன் மட்டுமே ஏற்றியிருந்தார்கள். வேறு எந்தவித சிகிச்சையும் வழங்கப்படவில்லை. பின்னர் மாலை யாழ்ப்பாணம் மாற்றியிருந்தார்கள்.

எமது முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் போதுமான துறைசார் வைத்தியர்கள் இல்லை. 25 வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால் மொழி தெரியாமையால் சரியான சேவையைப் பெறவே காலம் கடக்கிறது. அனுபவம் வாய்ந்த வைத்தியர்கள் மிகக் குறைவு.

இங்கு 80 வீதம் வேற்று மொழி பேசுவோரும் 20 வீதம் தமிழர்களும் நிர்வாகிகளாக உள்ளனர். தமிழ் மக்களின் பிரச்சினைகள் சரியாகப் புரியப்படவில்லை.

ஒரு பெண் சில மணி நேரங்களில் உயிரிழக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் அது மருத்துவ கட்டமைப்பின் தோல்வியே. எனது மருமகளின் மரணத்திற்கு நான் நியாயம் கேட்கவில்லை. ஆனால் இனி இது போன்ற துயரங்கள் நடக்காமல் இருக்க வேண்டும் என்பதே எனது உருக்கமான வேண்டுகோள் எனத் தெரிவித்தார். (ம-7)

### வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய

## முன்னாள் தலைவர், செயலாளருக்கு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அழைப்பு

(வவுனியா)

வவுனியா, நெடுங்கேணியில் அமைந்துள்ள வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தின் முன்னாள் தலைவர் சசிகுமார் மற்றும் முன்னாள் செயலாளர் தமிழ்ச்செல்வன் ஆகியோரை விசாரணைக்கு வருமாறு பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவு அழைப்பு விடுத்துள்ளது.

வவுனியா, நெடுங்கேணி பொலிஸார் ஊடாக இந்த அழைப்பாணைக் கடிதங்கள் நேற்று (06) திங்கட்கிழமை வழங்கப்பட்டுள்ளது.

வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் முன்னாள் நிர்வாகிகளான குறித்த இருவரும் வாக்குமூலம் ஒன்றினை பெறும் பொருட்டு நாளைமறுதினம் 9 ஆம் திகதி காலை 10 மணிக்கு வவுனியா பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு இந்த அழைப்பாணைக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் சிவராத்திரி தினத்தன்று ஆலய வழிபாட்டில் ஈடுபட்டிருந்த போது குறித்த இருவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

அதன் பின்னர் ஆலயத்திற்குப் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு பல மாதங்கள் ஆகியுள்ள நிலையில் தற்போது மீண்டும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,250)

## பாழடைந்த வீட்டிலிருந்து பல ஆயுதங்கள் மீட்பு

தெமட்டகொடை பேஸ்லைன் வீதியில் களனி வெளி ரயில் மார்க்கத்திற்கு அருகில் உள்ள பாழடைந்த வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பல ஆயுதங்களைப் பம்பலப்பிட்டிப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

அங்கிருந்து மீட்கப்பட்ட ஆயுதங்களுள் 9 mm ரகத் தோட்டாக்கள் பயன்படுத்தப்படும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட துப்பாக்கி ஒன்றும் இரண்டு தோட்டாக்கள் மற்றும் T-56 மெகசின் ஒன்றும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொரளை வனாத்தப் பகுதியில் செயற்படும் இரண்டு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களான வனாத்தமுல்லே துமிந்த மற்றும் சதுகே தரப்பினருக்கு இடையே இடம்பெற்று வரும் மோதல் காரணமாக எவரேனும் ஒருவரைக் கொலை செய்வதற்காக இந்த ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ம-7)

### 44.48 கோடி ரூபாவில்

## இலங்கைத் தமிழர்களுக்கு 772 புதிய வீடுகள்

(சென்னை)

தமிழ் நாட்டில் அகதிகளாக வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு 44.48 கோடி இந்திய ரூபாய் செலவில் 772 புதிய வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வீடுகளைத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

சென்னையிலுள்ள கட்சி அலுவலகத்தில் காணொளி ஊடாகக் குறித்த வீடுகளை முதலமைச்சர் நேற்றுத் திறந்து வைத்துள்ளார்.

இதன்படி தூத்துக்குடி, திருவண்ணாமலை, சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 772 வீடுகள் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

44.48 கோடி இந்திய ரூபாய் செலவில் இந்த வீடுகள் கட்டப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தமிழகத்தில் வாழும் இலங்கை ஏதிலிகளுக்காக பத்தாயிரத்து 469 வீடுகளை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவற்றுக்காக 629 கோடி இந்திய ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி

### பகுதி VI

17

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம், தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

அரசாங்கம், ஐரோப்பியர், இலங்கையரெனப் பாகுபாடு காட்டியமையினால் ஐரோப்பியரிலும் பார்க்க ஆற்றல் மிகுந்த உத்தியோகத்தர் இலங்கையரிடையே இருந்த போதிலும் அவர்களுக்குப் பொறுப்பான அதிகாரப் பதவிகள் கொடுக்கப்படவில்லை.

இனப் பாகுபாட்டினால், பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் சேர் பொன். அருணாசலம் அவர்களாவர். "சேர் பொன். அருணாசலம் ஒரு ஆங்கிலேயனாகவிருந்திருந்தால் அவர் குடியேற்றச் செயலாளர் பதவியையே வகித்திருப்பார்". எனக் குடியேற்றச் செயலாளராகிய அலெக்சான்டர் ஆஷ்மோர் வாயிலாக வெளிவந்த உண்மை. கோல்புறூக் ஆணைக்குழுவின் பின் குடித்தொகையும் அரசாங்கத்தினது வருமானமும் பன்மடங்கு அதிகரித்திருக்கின்றன. 1833 ஆம் ஆண்டு 10 இலட்சமாக இருந்த குடித்தொகை 1907 ஆம் ஆண்டு 40 இலட்சமாக அதிகரித்தது, 1834ஆம் ஆண்டு 207, 691 மாணவரிருந்தனர். 1833ம் ஆண்டு அரசாங்கத்தினது வருமானம் 4,375,550 ரூபாவாகவிருந்தது. ஆனால் 1907 ஆம் ஆண்டு 36, 573,824 ரூபாவாக அதிகரித்தது. ஆனால் இம்மாற்றங்களுக்கேற்றவாறு சட்டவாக்கச் சபையில் மாற்றங்கள் ஏற்படவில்லை.

மேற்கூறியனவற்றை எடுத்துக்காட்டி ஜேம்ஸ் பீரிஸ் போன்ற பிரமுகர்கள் விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்தனர். ஜேம்ஸ் பீரிசுடன் ஒரேமுகமாக அரசியற் சீர்திருத்தக் குரலை எழுப்பிப் பொது நலத்தொண்டு செய்ய பல பிரமுகர்கள் தோன்றினர்.

அவர்கள் பின்வருமாறு : H.J.C. பெரேரா, F.R.சேனநாயக, பொன்.அருணாசலம், பரன் ஜெயதிலக, பொன். குமாரசுவாமி, D.R. விஜயவர்த்தனா, பொன். இராமநாதன், J.W.de. சில்வா, டேவிட் ரொக்வுட், E.W.பெரேரா, C.F. கொறியா. நாட்டின் பாலனம் திறம்பட இயங்க அரசியல் முறை மாற்றியமைக்கப்படல் வேண்டுமெனவும், பொருளாதார வளர்ச்சிக்கும் சமூக வளர்ச்சிக்கும், சில அரசியற் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்னும் எழுச்சியும் இவர்களிடையே தோன்றின.

பிரதேசவாரியாகத் தேர்தல் வைத்து சட்டவாக்கச் சபைக்கு பிரதிநிதிகளை அனுப்ப வேண்டுமென்று மேற்கூறிய அரசியல் வாதிகள் கோரினர்.

1907ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இலங்கை வாழ் ஒல்லாந்தப் பறங்கியர் சங்கமும் 1908 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப் பட்ட தாழ்பூமி விளை பொருள் உற்பத்திச் சங்கமும் இக் கோரிக்கைகளை ஆதரித்தன.

பல பிரமுகர்களடங்கிய இலங்கைச் சீர்திருத்தக் கூட்டவை (Ceylon Reform League) ஆளுநர் மக்கலம் அவர்களுக்கு ஒரு நினைவேட்டை 1908ஆம் ஆண்டு அனுப்பிவைத்ததோடு அதன் பிரதியொன்றை குடியேற்ற நாட்டரசுச் செயலாளருக்கு அனுப்பி வைத்தது.

அது, அந் நினை வேட்டில் உத்தியோகத்தரும் உத்தியோகத்தரல்லாதோரும் சமதொகையாகவுள்ள ஒரு சட்டவாக்கச் சபை அமைக்கப்படல் வேண்டுமெனவும், உத்தியோகத்தரல்லாதோர் இலங்கை முழுவதிற்கும் பிரதிநிதித்துவம் வகிக்கும் பொருட்டு தேர்ந்தெடுக்கப்படல் வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டது. மேலும் தோட்டத் துரைமார் சங்கமும் வணிகர் மன்றமும் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் அனைவரும் ஐரோப்பியராய் அமைய இருப்பதால், அவர்கள் எப்பொழுதும் அரசாங்கத்தையே ஆதரிப்பர். ஆகவே அரசாங்க சட்டங்கள் தோற்கடிக்கப்படும் என்ற ஐயப்பாடு அரசாங்கத்திற்கு இருக்க வேண்டிய அவசியமில்லை என அந் நினைவேட்டில் விளக்கப்பட்டது.இலங்கைச் சீர்திருத்தக் கூட்டவையின் காரணங்கள் எவையாயினும் ஆளுநர் மக்கலம் சட்டவாக்கச் சபையின் அமைப்பில் எவ்வித மாற்றத்தையும் கொண்டுவர விரும்பவில்லை. அவர், குடியேற்ற நாட்டரசுச் செயலாளருக்கு அனுப்பிய அறிக்கையில் இலங்கைச் சீர்திருத்தக் கூட்டவை, இலங்கையின் பல்வேறு சமூகங்களைக் கொண்டவொரு சங்கம் அல்லவெனவும், அது ஒரு விவாதச் சங்கமெனவும்எடுத்துரைத்தார்.

மேலும், அவர் தனது அறிக்கையில் இலங்கை வாசிகளுக்கு வாக்குரிமை வழங்கப்படின், அவர்கள் அவ்வுரிமையைத் துஷ்பிரயோகப்படுத்துவரெனவும் அவர்களுக்குத் தேவையானது நல்ல அரசாங்கமேயன்றி சுயாட்சி அல்லவெனவும் அவர்களின் சிறந்த பிரதிநிதிகள் அரசாங்க முகவர்களும், குடியியற் சேவையாளருமே எனத் தகவுரை செய்தார்.

இந்நிலையில் இலங்கைச் சீர்திருத்தக் கூட்டவை ஒரு தூதுக்குழுவை, குடியேற்ற நாட்டரசுச் செயலாளரை இங்கிலாத்தில் பேட்டி காணும் முகமாக 1909 ஆம் ஆண்டு அனுப்பி வைத்தது. அதில் H.J.C. பெரேரா, F.H.M. கோபற், K.N கோமஸ், J.W. de சில்வா, டேவிட் ரொக்வுட் ஆகிய சீர்திருத்த வாதிகள் அங்கத்துவம் வகித்தனர். இதற்கிடையில் யாழ்ப்பாணச் சங்கம், சிலாபச் சங்கம், தாழ் பூமி விளைபொருள் சங்கம், ஆய சங்கங்கள் தமது கோரிக்கைகள் நிறைந்த நினைவேடுகளை குடியேற்ற நாட்டரசுச் செயலாளருக்கு அனுப்பி வைத்தன.

மேற்கூறிய தூதுக் குழு 1909ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி உதவிக் குடியேற்ற நாட்டரசுச் செயலாளராகிய சீலி என்பவரைப் பேட்டி கண்டது. சீலி, இக்குழுவின் கோரிக்கைகள் அனைவற்றையும் நிறைவேற்ற முடியாவிடினும் பிரதிநிதித்துவ முறையில் ஏதாவது மாற்றத்தைக் கொண்டுவருவதாக உத்தரவாதமளித்தார்.

அக்காலத்தில் இங்கிலாந்திலிருந்த ஜேம்ஸ் பீரிஸ் அவர்களுக்கும் பேட்டியளிக்க விரும்புவதாக சீலி அறிவித்ததன் பேரில் ஜேம்ஸ் பீரிஸ் அவர்களும் தனது கோரிக்கைகளை நேரில் சமர்ப்பித்தார், அவருடன் E.W. பெரேராவும் சீலியைப் பேட்டி காணச் சென்றிருந்தார். ஜேம்ஸ் பீரிஸ் தனது விண்ணப்பத்தில் கல்வியறிவுள்ள இலங்கையருக்கு வாக்குரிமை வழங்கி அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படல் வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

ஜேம்ஸ் பீரிசின் தூண்டுதலினால் இலங்கையரது விடுதலைப் போராட்டம் இங்கிலாந்து மக்களின் கவனத்தைக் கவர்ந்தது. சேர.ஹென்றி ஹோட்டன், சேர். ஹெபேட் றொபேட்ஸ், கோபற், அலெக்சாண்டர் பெயர்லி போன்ற பொது மக்கள் சபை அங்கத்தவர்கள், இலங்கைச் சட்டக்வாக்கச் சபையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமை பெருங்குறையெனக் கண்டித்து தேர்தல் வழிகண்ட பிரதிநிதித்துவம் இலங்கை மக்களுக்கு வழங்கப்படல் வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர்.

அதுவுமன்றி மற்றைய இங்கிலாந்துக் குடியேற்ற நாடுகளில் காணப்படுவது போல் இலங்கையருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படல் வேண்டு மென உதவிக் குடியேற்ற நாட்டரசுச் செயலாளரைக் கேட்டுக் கொண்டனர்.

இங்கிலாந்திலும் இலங்கையிலும் இலங்கையரின் விடுதலைப் போராட்டம் வலுவடையவே ஆளுநர் மக்கலம் அரசியற் சீர்திருத்தங்களை இலங்கையிற் கொண்டுவர வேண்டுமென உணர்ந்தார். இதுவரையும் உயர்ந்த சாதியினருக்கே சட்டவாக்கச் சபையில் பிரதிநிதித்துவம் இருந்து வந்தது.

தாழ்பூமிச் சிங்களவரின் குடித்தொகை அதிகரித்ததால் சட்டவாக்கச் சபையில் அவர்களது பிரதி நிதிகளின் தொகை போதாதிருந்தது. ஏறத்தாழ பத்து இலட்சம் மக்களைக்கொண்ட தமிழினத்திற்கு இதுவரை ஒரேயொரு பிரதிநிதியே இருந்தார். மேலும் புதிதாகத் தோன்றிய மத்திய வகுப்பினரின் கோரிக் கைகளையும் உதாசீனப் படுத்தவும் ஆளுநரால் முடியவில்லை.

ஆளுநர் மக்கலம் அவர்களின் தகவுரையின்படி 1910 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24ம் திகதி ஒரு அரசகட்டளை பிறப்பிக்கப்பட்டு இலங்கைச் சட்டவாக்கச் சபை மாற்றியமைக்கப்பட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சார...

நேற்றுத் திங்கட்கிழமை யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட 18 ஆம் வட்டாரம் கொழும்புத்துறை வளம்புறம் வீதி மின் விளக்கு திருத்த வேலைகளில் குறித்த ஊழியர் ஈடுபட்டிருந்தார்.

இதன்போது அருகிலுள்ள வீட்டு நபர் ஒருவர் தனது மின்கம்பத்தில் உள்ள மின் விளக்கை முதலில் பழுது பார்க்குமாறு ஊழியருடன் முரண்பாட்டில் ஈடுபட்டு அவரைத் தாக்கியுள்ளார்.

தாக்கியதில் காயம் அடைந்த குறித்த ஊழியர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் முறைப்பாடும் வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2025.10.06
சீட்டிழுப்பு இலக்கம் 5974
V 9 8 7 0 3 7
அத சம்பத
V 7 0 3 7
சீட்டிழுப்பு இலக்கம் 549
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.10.06
சீட்டிழுப்பு இலக்கம் 0090
மீனம் 05 25 29 45

தன நிதானய
திகதி - 2025.10.06
சீட்டிழுப்பு இலக்கம் - 2004
T 28 45 49 60 T

மெகா பவர்
திகதி 06/10/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2322
E 19 26 47 68 75

ஜய ஜய
திகதி 2025.10.06
சீட்டிழுப்பு இலக்கம் 0242
P 5 9 1 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4216
சீட்டிழுப்பு திகதி 06.10.2025
W 05 27 67 80
W

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.10.06
சீட்டிழுப்பு இலக்கம் 1283
மேடம் 28 32 35 42 மேடம்

## காரைநகரில்...

இதில் சந்திரகுமார் லவபாலன் (வயது-34) என்பவரே உயிரிழந்தவராவார்.

விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## கம்பளையில்...

தெரிவிக்கப்படுகின்றது.

அந்த வீதியால் பயணித்த கார் ஒன்றும் லொறி ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த சந்தர்ப்பத்தில் அந்த வீதியைக் கடக்க முயன்ற மூன்று பெண்களும் விபத்தில் சிக்கிய நிலையில் உயிரிழந்துள்ளனர்.

அவர்கள் அப்பகுதியில் உள்ள ஒரு கோவிலில் மத நிகழ்ச்சியில் பங்கேற்க வந்தபோது இந்த விபத்தில் சிக்கியதாகக் கூறப்படுகிறது. (ம-7)

## வடக்கு...

ஒருவரின் இல்லத்தில் அவரைக் கைது செய்யும் முகமாக வீட்டிற்குள் நுழைந்து குறித்த வீட்டில் சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரம் எதுவுமின்றி தேடுதல் நடத்தும் தோரணையில் அச்சுறுத்தலாக யாழ்ப்பாணம் விசேட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் நடந்து கொண்டமையை கண்டித்து 07 ஒக்ரோபர் 2025 அன்று வட மாகாணத்தில் உள்ள சட்டத்தரணிகள் யாவரும் பணிப்புறக் கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

இவ்வறிவித்தல் இன்று நீதிமன்றை நாடி வரும் பொதுமக்களின் நன்மை கருதி வெளியிடப்படுகின்றது என யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது. (ம-7)

## யாழில் பெண்...

ஒன்றின் உறுதி எழுதியதில் மோசடி இடம்பெற்றமை தொடர்பிலான விசாரணைகளின் அடிப்படையில் குறித்த காணியின் உறுதி முடிப்பை நிறைவேற்றிய பெண் சட்டத்தரணி நேற்றுத் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சட்டத்தரணியை விசாரணைகளின் பின்னர், பொலிஸார் மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவானின் முன்னிலையில் முற்படுத்தியவேளை, கைதான சட்டத்தரணியை 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு ஆள் பிணையில் செல்ல அனுமதித்த மன்று, வெளிநாட்டுப் பயணத் தடையை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)

## இளைஞன் ஒருவன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுழிபுரம் பகுதியிலிருந்து இளைஞன் ஒருவனின் சடலம் சுருக்கிட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் மூளாய்ப் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மரண விசாரணைகளை யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,104)

## மன்னாரில்...

நேற்று மாலை மன்னார் பேசாலை கிராமத்திற்கு உட்பட்ட தெற்கு கடற்கரைப் பகுதியில் காற்றாலைத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான மணல் ஆய்வு முன்னெடுக்க இயந்திரங்களுடன் குழு ஒன்று வருகை தந்ததை அறிந்து கொண்ட பிரதேச மக்கள் குறித்த பகுதிக்குச் சென்று வருகை தந்த குழுவினருடன் கருத்து முரண்பாட்டில் ஈடுபட்டனர்.

இதன்போது பேசாலைப் பொலிஸாரும் அவ்விடத்திற்குச் சென்ற நிலையில் அங்கு பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

மேலும் காற்றாலைத் திட்டத்தை செயற்படுத்துவதற்கான மணல் ஆய்வு முன்னெடுக்க இயந்திரங்கள் ஏற்றி வந்த டிராக்டர் இயந்திரத்தை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களின் தொடர் எதிர்ப்பை தொடர்ந்து வந்த குழுவினர் அவ்விடத்தில் இருந்து பின் வாங்கிச் சென்றனர். (ம-7)

## இலங்...

ஏற்கனவே கடந்த மாத ஆரம்பத்தில் இந்தப் பிரேரணையின் முதலாவது வரைபு சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் அதில் பல திருத்தங்கள் செய்யப்பட்டன. அந்தவகையில் திருத்தப்பட்ட இறுதி வரைபு நேற்று சமர்ப்பிக்கப்பட்டு, நேற்றைய தினமே வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

இலங்கை மீதான மனித உரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகத்தின் அதிகாரத்தை நீடிக்கும் தீர்மானத்திற்கு, அதனை நேற்றுத் திங்கட்கிழமை முன்வைத்த பிரதான 5 நாடுகளுக்கும் மேலாக மேலும் 22 நாடுகள் இணை அனுசரணை வழங்கி இருந்தன.

பிரிட்டன் தலைமையில் கனடா, மாலாவி, மொன்டினீக்ரோ மற்றும் வடமசிடோனியா ஆகிய இணையனுசரணை நாடுகளால் தயாரிக்கப்பட்ட இந்தப் புதிய பிரேரணையின் முதலாவது வரைபு கடந்த செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி வெளியிடப்பட்டது.

இதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இந்தப் பிரேரணை நிறைவேற்றப்படும்போது இலங்கை அரசாங்கம் வாக்கெடுப்பைக் கோராமல் இருக்க முடிவு செய்திருந்தது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடர் செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி ஆரம்பமானது.

இந்நிலையில் நாளை ஒக்ரோபர் மாதம் 8ஆம் திகதியுடன் கூட்டத்தொடர் நிறைவடைகின்ற நிலையில் அதற்கு முன்னதாக நேற்றைய தினம் பிரேரணை நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

உத்தியோகபூர்வ முடிவுகள்
06.10.2025 வெற்றி வாரம் 0682
ஆங்கில எழுத்து T
மற்றும் வெற்றி இலக்கம் 5 3 1 9 5 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,800,122.80
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2948
சீட்டிழுப்பு திகதி 2025.10.06 தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 03 42 59 67 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,139,822.40

சனிதா
திகதி 06.10.2025 வெற்றி வாரம் 5109
வெற்றி இலக்கங்கள் 25 48 75 77 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,911,089.60
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
திகதி 2025.10.06 வெற்றி வாரம் 2167
வெற்றி இலக்கங்கள் 03 12 17 60 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 32,035,816.80


ராசி
சீட்டிழுப்பு வாரம் 4660
சீட்டிழுப்பு திகதி 06.10.2025 தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 06 20 46 59 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,178,712.00

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
A 13 60 62 64 67
சீட்டிழுப்பு வாரம் 2124
06.10.2025 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.598,393,159.40
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2774
சீட்டிழுப்பு திகதி: 2025.10.06
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,186,960.00
வெற்றி இலக்கங்கள் 10 14 32 63 U

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி அரச முதியோர் இல்லத்தில் வாழ்ந்து 2024.10.01 இல் இருந்து 2025.09.30 வரையான காலப்பகுதியில் இயற்கையெய்திய முதியவர்களினை நினைவு கூர்ந்து அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்



**அமரர்.திரு.கந்தையா சயானந்தன் (70)**
அல்வாய், கரவெட்டி.
அனுமதித்த திகதி 20.03.2012
இயற்கை எய்திய திகதி 28.10.2024



**அமரர்.செல்வி.கதிரவேலு செல்லம்மா(76)**
கனேஸ்வரம், அளவெட்டி.
அனுமதித்த திகதி 05.06.2024
இயற்கை எய்திய திகதி 06.11.2024




**அமரர்.திருமதி.செல்லன் மகேஸ்வரி(78)**
ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்
அனுமதித்த திகதி 26.05.2022
இயற்கை எய்திய திகதி 04.12.2024



**அமரர்.திருமதி.மயிலன் கஜேந்தினி(69)**
திருகோணமலை
அனுமதித்த திகதி 25.02.2022
இயற்கை எய்திய திகதி 07.12.2024



**அமரர்.திரு.மாதையா நாகராசா(74)**
பூநகரி
அனுமதித்த திகதி 27.02.2020
இயற்கை எய்திய திகதி 09.12.2024



**அமரர்.திரு.உலகர் நாகமணி(96)**
சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்
அனுமதித்த திகதி 07.07.2018
இயற்கை எய்திய திகதி 31.12.2024




**அமரர்.செல்வி.தம்பிஐயா மணிமேகலை(80)**
12ம் வட்டாரம், புங்குடுதீவு
அனுமதித்த திகதி 21.05.2022
இயற்கை எய்திய திகதி 18.01.2025



**அமரர்.திருமதி.வீரவாகு செல்லம்மா(86)**
குரும்பசிட்டி, தெல்லிப்பளை
அனுமதித்த திகதி 07.06.2023
இயற்கை எய்திய திகதி 27.01.2025




**அமரர்.திரு.அந்தோனி யுவானிஸ் முறாயிஸ்(84)**
வங்காலை, மன்னார்
அனுமதித்த திகதி 12.12.2023
இயற்கை எய்திய திகதி 02.02.2025




**அமரர்.திரு.கந்தையா பாலகிருஸ்ணன்(76)**
அராலி மத்தி, வட்டுக்கோட்டை.
அனுமதித்த திகதி 29.01.2019
இயற்கை எய்திய திகதி 20.03.2025




**அமரர்.திருமதி.சோமஸ்கந்தசர்மா நாகேஸ்வரி(71)**
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
அனுமதித்த திகதி 15.06.2009
இயற்கை எய்திய திகதி 20.03.2025



**அமரர்.திரு.கதிரன் கந்தையா(77)**
நவபுரம் கைதடி கிழக்கு, கைதடி
அனுமதித்த திகதி 14.07.2016
இயற்கை எய்திய திகதி 24.03.2025



**அமரர்.திரு.சின்னப்பொடி பொன்னையா(93)**
மதவடி லேன், கட்டுடை, மானிப்பாய்
அனுமதித்த திகதி 17.10.2016
இயற்கை எய்திய திகதி 07.04.2025



**அமரர்.திரு.செல்லத்துரை செந்தில்நாதன்(75)**
குரும்பன், ஏழாலை மேற்கு, ஏழாலை
அனுமதித்த திகதி 04.01.2023
இயற்கை எய்திய திகதி 13.04.2025



**அமரர்.திரு.சிதம்பரநாதன் செல்லத்துரை(76)**
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
அனுமதித்த திகதி 08.11.2023
இயற்கை எய்திய திகதி 14.04.2025



**அமரர்.திருமதி.குமாரசேகரம் உமாதேவி(71)**
297,ஹேகித்த, வத்தளை
அனுமதித்த திகதி 12.04.2018
இயற்கை எய்திய திகதி 04.05.2025




**அமரர்.திருமதி.புவனேஸ்வரன் தவபூசணம்(68)**
புதுக்கினத்தடி, வதிரி, கரவெட்டி
அனுமதித்த திகதி 19.09.2000
இயற்கை எய்திய திகதி 09.05.2025



**அமரர்.திருமதி.இந்திரன் இந்திரகுமாரி(63)**
வேலணை வடக்கு, வேலணை.
அனுமதித்த திகதி 25.08.2023
இயற்கை எய்திய திகதி 11.05.2025



**அமரர்.செல்வி.சீனியன் இராசமணி(74)**
வடயந்தோட்டம், கரணவாய் மேற்கு, மண்டான்
அனுமதித்த திகதி 04.01.2019
இயற்கை எய்திய திகதி 12.05.2025



**அமரர்.திரு.தம்பையா தனபாலசிங்கம்(90)**
வல்லிபுரக்கோவிலடி, வல்லிபுரம்



**அமரர்.திருமதி. நவரத்தினம் விவேகானந்தாதேவி(81)**
மயிலுவீதி, ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை
அனுமதித்த திகதி 03.02.2004
இயற்கை எய்திய திகதி 16.05.2025



**அமரர்.திருமதி.ஜெயரட்ணம் பாக்கியம்(92)**
சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்
அனுமதித்த திகதி 21.02.2018
இயற்கை எய்திய திகதி 16.05.2025



**அமரர்.செல்வி.பரராஜசிங்கம் லோகநாயகி(72)**
சோழர் கினற்றடி, புலோலி தெற்கு, பருத்தித்துறை
அனுமதித்த திகதி 31.12.2022
இயற்கை எய்திய திகதி 17.05.2025



**அமரர்.திருமதி.தர்மலிங்கம் சந்திரகலா(71)**
அல்வின் வீதி, காரைநகர்
அனுமதித்த திகதி 23.02.2021
இயற்கை எய்திய திகதி 19.05.2025



**அமரர்.திருமதி.சுந்தரலிங்கம் ஜெயலட்சுமி(85)**
நுணாவில் மத்தி, நுணாவில்
அனுமதித்த திகதி 13.06.2024
இயற்கை எய்திய திகதி 21.05.2025



**அமரர்.திருமதி.மகாலிங்கம் ஜீவரட்ணம்(81)**
கட்டுவன் மேற்கு, தெல்லிப்பளை
அனுமதித்த திகதி 28.02.2023
இயற்கை எய்திய திகதி 23.05.2025



**அமரர்.செல்வி.நாகன் ஜெகதீஸ்வரி (61)**
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை
அனுமதித்த திகதி 20.03.2017
இயற்கை எய்திய திகதி 02.06.2025



**அமரர்.திருமதி.யுகராசா ஜெகதீஸ்வரி(72)**
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்
அனுமதித்த திகதி 11.11.2002
இயற்கை எய்திய திகதி 17.06.2025



**அமரர்.திரு.பரமானந்தப்பிள்ளை திருநாவுக்கரசு(82)**
வட்டுக்கோட்டை தென்மேற்கு, வட்டுக்கோட்டை
அனுமதித்த திகதி 31.10.2018
இயற்கை எய்திய திகதி 04.09.2025

**அமரர்.திரு.இராசேந்திரம் பாலசுந்தரம்(82)**
8ம் வட்டாரம், மண்டைதீவு
அனுமதித்த திகதி 10.04.2025
இயற்கை எய்திய திகதி 21.04.2025

**அமரர்.திருமதி.இராமநாதன் ஆனந்ததேவி(81)**
"அன்னவிலா" கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்
அனுமதித்த திகதி 26.03.2025
இயற்கை எய்திய திகதி 26.04.2025

**அமரர்.திரு. ஆறுமுகம் மீனாம்பிகை(79)**
விக்னேஸ்வரா வீதி, தையிட்டி தெற்கு, காங்கேசன்துறை.
அனுமதித்த திகதி 17.03.2025
இயற்கை எய்திய திகதி 08.05.2025

**அமரர்.திருமதி.ஜெயராசா மகேஸ்வரி(87)**
V.T.S.லேன், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.
அனுமதித்த திகதி 26.12.2024
இயற்கை எய்திய திகதி 13.05.2025

**அமரர்.திரு.சவரிமுத்து சச்சிதானந்தன்(79)**
கே.கே.எஸ் வீதி, இனுவில் சுன்னாகம்.
அனுமதித்த திகதி 22.04.2025
இயற்கை எய்திய திகதி 20.05.2025

**அமரர்.திரு.பொன்னம்பலம் நடராசா(74)**
குமிழமுனை மத்தி, குமிழமுனை
அனுமதித்த திகதி 09.06.2025
இயற்கை எய்திய திகதி 09.07.2025

**அமரர்.திரு.விஜயரத்தினம் ஸ்ரீதரன்(71)**
யாழ். போதனா வைத்தியசாலை மூலம் அனுமதிக்கப்பட்டவர்
அனுமதித்த திகதி 15.04.2025
இயற்கை எய்திய திகதி 22.08.2025

**அமரர்.திருமதி.கிருஸ்னன் பூமணி(78)**
தவசிக்குளம், மிருசுவில்
அனுமதித்த திகதி 15.04.2025
இயற்கை எய்திய திகதி 27.08.2025

**அமரர்.திரு.முத்துவேலு சிவர்ராசா(81)**
103/15, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை,யாழ்ப்பாணம்.
அனுமதித்த திகதி 04.08.2025 இயற்கை எய்திய திகதி 17.09.2025

அரச முதியோர் இல்லம்,
கைதடி.

இங்ஙனம்
அத்தியட்சகர், அலுவலர்கள் மற்றும்
இல்ல வாழ் முதியவர்கள்.

(C-4028)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.